# பக்தி விஜயம்..



சித்திரை - வைகாசி : 2013
ரதம் : 02
வழி : 04

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்



குதிரைமீது வந்த சிவபிரான் ..

ஆனிமாத அற்புதங்கள்! ..

சனீஸ்வரனுக்கும், காகத்திற்கும் ஒரே நிலைமை!

அண்டமெங்கும் ஒலிக்கின்ற ‘ ஓம் ’ ஒலி

கற்பிக்கும் குருவை வணங்கும் மாதம் இது

உள்ளே ...
வாசிப்பு இன்பமும், ஆன்மீகமும் !

நம்நாட்டு சஞ்சிகை

காவியங்களில் கவலைகள் மறப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ' பக்தி விஜயம்.. ' எதற்காக?

பாலர்களை கவர்ந்திட

மாணவர் சமய அறிவு மேவிட



வாசிப்பு ஆர்வம் பெற்றிட

புரான,இலக்கியங்களை சுவைத்திட

சமயத்தின் தகவல்கள் புரிந்திட

மங்கையர்கள் அறிந்திட

நாட்கள் விரதங்கள் தெரிந்திட


அடியார்கள் இன்புற

வீட்டுக்குறிப்புகள் அறிந்திட

பெரியோர்கள் மகிழ்ந்திட

ராசிப்பலன்கள் பார்த்திட

**மாதாந்தம் ' பக்தி விஜயம்.. ' உங்களின்**
**வீடுதேடி வரவேண்டுமா?**
**சந்தாதாரர் ஆகுங்கள்!**



0713861168, 0776649635
0232250071, 0774335144

இலக்கங்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்

எஸ்.பி.முத்து - கணக்கு இல. 941641, இலங்கை வங்கியில்
சந்தாவை செலுத்தலாம்.
காசோலைகள், மணி ஓடர்கள் ஏற்கப்படுகின்றன.

**இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் வாசகர்கள் சந்தாதாரர் ஆகும்படி வேண்டுகிறோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நாளும் இன்புற்றிருக்க...




"தாயிற் சிறந்த கோயில் இல்லை"

# பக்தி விஜயம்..



100/=




*இந்து சமூகத்தின் ஆன்மீக எழுத்துப் பணியில் ..*


இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம் :
*எஸ். பி. முத்து*
(பிரதம ஆசிரியர்)
அனுசரணை :
*வை. திருச்செல்வம்*

இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி :
555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை.
தொலைபேசி :
**071- 3861168**
**077- 6649635**
**023- 2250071**
**077- 4335144**
மின்னஞ்சல் :
nenjame @ gmail.com


சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவை என்றும் நன்றிக்குரியன..

பெரியோர்களும், சான்றோர்களும் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம்..

## என்ன கைமாறு செய்வோம்!

**சிவச்செல்வர்களுக்கு வணக்கம் ..**

பக்தி விஜயம் தனது முதலாவது ஆண்டை நிறைவு செய்கிறது. இனி இரண்டாவது ஆண்டுக்கான சேவை ஆரம்பமாகிறது.

இலங்கையில், அதுவும் நம் வாழ்விடங்கள் போன்ற பகுதிகளில் சஞ்சிகை வெளியீடு என்பது விஷப்பரீட்சைக்கு ஒப்பானது என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படியிருந்தும் வெளியீடுகள் வரத்தான் செய்கின்றன. நிலைகுலைந்தும் போகின்றன.

நம்நாட்டு வாசிப்புத்துறைக்கு இது புதிதல்ல! சில சமூகத்தில் தேடல் ஞானம் முக்கியமற்றதாக இருந்தால் அதற்கு ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் படைப்பாளி என்பவன் தனது ஆதர்ஷ எழுச்சியை ஆதாயத்திற்காக தருவதில்லை. அவனது உள்முகம் காண்கின்ற நிதர்சனத்தின் வெளிப்பாடே எழுத்துகள். பெரும் சமூகமொன்றின் விதிவிலக்காக, விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே எழுத்துலகைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அதனால் மிக விரைவாகவே தனிமைப்படுத்தப்படுவார்கள். இதனால் அவர்களுக்கு பொருளாதாரம் நட்டமடையலாம். ஆனால் சமூகமும் அடைகின்ற நட்டம் ஒன்று இருக்கிறது. அது பெரிதாகவும் இருக்க வாய்ப்புண்டு.

இந்த சஞ்சிகையை வெளியிடும் முன்னர் இந்த அளவுகளை கணிப்பிட்டே இறங்கினோம். தெய்வாதீனமாக இம்முறை நம் சமூகம் அந்த நட்டத்தை அடைய தயாராக இருக்கவில்லை. மாறாக, பயனுள்ள வரவுகளை அள்ளத் தயாராகியது. விளைவு .. இரண்டாவது ஆண்டிலும் விஜயம் தொடர்வதற்கு திருவருள் கிட்டியிருக்கிறது.

இந்த அற்புதத்திற்கு உரியவர்கள் வாசகர்களும், வாசிப்பு ஆர்வத்திற்கு நீர் ஊற்றி வளர்க்கும் சமூக அக்கறையாளர்களும் மட்டும்தான். இவர்களாலேயே இந்த பரீட்சையில் வெற்றிபெற முடிந்தது. இந்த உதவிக்கு என்ன கைமாறு செய்யப்போகிறோமோ தெரியவில்லை ..

**நன்றியோடு, ஆசிரியர்**


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேவாரப் பாடல்களை பாடும் போட்டியில் நான்காவது இடத்தை சிங்கப்பூரில் பிடித்திருக்கிறார் ஒரு சீனப்பெண்.

தனது 57 வது வயதில் 2009 ம் ஆண்டு இந்த அதிசய சாதனையை புரிந்திருக்கிறார்.

பெங்க் சூ என்னும் பெயர்கொண்ட இவர் தேவாரம் உட்பட, திருமுறைப் பாடல்களைப் பாடும் போட்டி ஒன்றில் கலந்துகொண்டு இந்த அதிசயத்தை நிகழ்த்தியபோது சைவஉலகம் பூரிப்படைந்தது. இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் இவருக்கு தமிழ் தெரியாது. பிறகு எப்படி இது சாத்தியமானது என்று அறிய முயற்சித்தபோது --

ஒருசமயம் சிங்கப்பூரில் பக்தி விழா ஒன்றில் தமிழகத்திலிருந்து சென்ற இசைக்கலைஞர் சுதா ரகுநாதன் என்பவர் பாடிக்கொண்டிருந்தார். அதனை தற்செயலாக பார்த்து, செவிமடுத்த பெங்க் சூ அதில் மெய்மறந்தார். தானும் அதனைக் கற்றுவிட்டால் எப்போதும் அனுபவிக்கலாமே என்ற முடிவுக்கு வந்தார். பாடல்களை கற்க தகுந்த குருவுக்காக அலைந்தார்.


சிங்கப்பூரில் தண்டாயுதபாணி திருக்கோயிலில் வைத்தியநாத ஓதுவார் அவர்கள் அறநெறிப்பாடசாலைகள் மூலமாக, திருமுறைப்பாடல்களை மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதை கண்டு பிடித்தார். தானும் அதில் சேர்ந்தார். தேவாரப்பாடல்களை படிப்படியாக கற்றுக்கொண்டு பாடவும் தொடங்கினார். பிறகு தேர்ச்சிபெற்ற பண்ணிசைப் பாடகரானார்!

''ரோமன் எழுத்துகளில் திருமுறைப்பாடல்களை எழுதி வைத்துக்கொண்டு, மனப்பாடம் செய்து பயிற்சி பெற்றேன். என்னுடைய ஆசிரியர் தமிழ்நாட்டில் தருமபுரம் ஆதீன தேவாரப் பள்ளியில் பயின்றவர் ..''


என்கிறார் பக்திப் பரவசமாக.

இந்த சீனப்பெண்மணி இந்த அளவுக்கு இந்து கலாச்சாரத்திலும், தேவார இசையிலும் பற்று கொண்டதும், சாதித்ததும் எதனால்? ..

திருமுறைக்கு நாயகனான அந்த பரம்பொருளுக்கே அது வெளிச்சம்.




## சிங்கப்புரில் ஒலித்த சீன தேச குயிலின் திருமுறை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகின்றனர் ..



## உன் துணை வேண்டுகிறேன் ..

மாதோட்டத்திலே மாண்புடனே
பாலாவிக்கரை தனிலே --
பக்தி விஜயமாக
அருள்மழை பொழியும்
எம்பிரானே!
ஈசன் திருநாமம் -- இந்த
ஈழத்திருநாடெங்கும் உன்
அருள்விஜயம் சுமந்துவரும்
வாழ்வியல் வேதங்கள் -- எம்
வாழ்வுக்கு வழிகாட்டிட,
கேதீச்சரத்தானே! -- உன்
அருள்மழை பொழியட்டும் ..

**திருமதி. ப. கல்யாணி,**
**வெளியாய,**



வாழ்த்துகின்றனர்

வாழ்த்துகின்றனர்



"..பிறப்பில் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவனான நான் புராணங்களிலும், இதிகாச கதைகளிலும் அளவற்ற பிரியம் கொண்டவன். எனது ஆரம்பகால வாழ்வில் கேரளாவைச் சேர்ந்த பரமு ஆசாரியார் அவர்கள் மூலமாகவே இந்த அரிய விஷயங்களை கேட்டு இன்புற்றேன். சமய இலக்கிய ஆர்வம் ஏற்பட அவரே என் குருநாதராக இருந்தார். இந்துக்களின் கலாச்சாரங்களை மிகவும் விரும்புவேன். அவருக்குப்பின் தங்களின் 'பக்தி விஜயம் ..' நூல் மீண்டும் எனது மகிழ்ச்சிக்கு உதவி புரிகிறது. மேலும் மேலும் அறிந்து மகிழலாம் என நம்புகிறேன் .."

**ந. மரியநாயகம்,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

"சிறப்பான ஒரு முயற்சி. எங்கட சமயத்துக்கு இப்ப தேவையான ஒன்று. முதலாவது புத்தகத்திலேயே மனசை பறிகொடுத்தோம். ஆக்கங்கள் ஒவ்வொன்றும் 'சூப்பர்! '. இங்கையிருக்கிறவை யெல்லாம் பாராட்டுகினம். எங்கட கோயிலுக்கு வாரவை எல்லாருக்கும் ஒவ்வொரு மாதமும் தேவைப்படுது. அனுப்பி வைங்க. இந்த வெளியீட்டுக்குப்பிறகுதான் பல விஷயங்களை அறிஞ்சு வர்றோம் ..

இந்த முயற்சிய எப்படி பாராட்டுறதுன்னு தெரியல .."

**திருமதி. கணேஸ்வரி சேவியர்,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லையிலிருந்து ..



வாழ்த்துகின்றனர்.....





மன்னார் மாவட்டத்திலிருந்து
வெளிவரும்
பக்தி விஜயம் மாத
சஞ்சிகை ஆண்டு நிறைவை
எட்டியிருப்பதையிட்டு
மகிழ்ச்சி அடைகிறோம்.
வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்
என்னும் வாக்குக்கு அமைய
நம் சைவ மக்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில்
இந்த சஞ்சிகை வருகிறது. சமயத்தின் ஆழமான கருத்துகளை
எளிய முறையில் சொல்லி, ஏற்ற சித்திர வடிவங்களோடு, சிறியோர்
முதல் பெரியோர் வரை விளங்கிக்கொள்ளும் வகையில் இது அமைந்திருக்கிறது.
ஒரு மாதத்திலே நடைபெறும் சமய விடயங்கள் அனைத்தோடு, ஆன்மீக நெறியை பினபற்ற வேண்டிய
தேவை கருதி, புராண இதிகாச கதைகளை ஓவியங்களுடன் தருவது அனைவரையும் மகிழ்ச்சியில்
ஆழ்த்துகிறது. கதம்ப அமைப்போடு வெளிவந்து கொண்டிருக்கும் 'பக்தி விஜயம் ..'
பல்லாண்டுகள் வளர்ச்சி அடைய வாழ்த்துகிறோம்.

இச்சஞ்சிகையை வெளிக்கொணரும் ஆசிரியர், அவருக்கு உதவி புரியும்
அனைத்து உள்ளங்கள் யாவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.


இந்த சஞ்சிகையை அனைவரும் படித்து பயன் பெறுவார்களாக ..
''என்றும் வேண்டும் இன்ப அன்பு ..''



**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
நல்லூர்.



**வாழ்த்துகின்றனர் ..**



**மன்னார் சிவபூமியிருந்து ..**

.. ''பக்தி விஜயம் .. ஓர் ஆன்மீக விஜயம். இதன் ஒருவருட பூர்த்தியை
இட்டு மிகவும் பெருமிதம் அடைகிறேன்.

திருவாசகம், சிவபுராணம், புராணங்கள் போன்றவற்றின்
அருமையை சுவையாக விளக்கும் பணியை செய்துவருகின்ற இந்த
பக்தி விஜயம் இன்னும் பல ஆண்டுகள் விஜயம் செய்ய
எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை பிரார்த்திக்கிறேன்.

சுபமஸ்து .. ''

**பிரம்மஸ்ரீ மனோ ஐங்கர சர்மா**
**மன்னார் இந்துக்குருமார்**
**ஒன்றிய தலைவர்**



**யாழ் மண்ணிலிருந்து ..**



**வாழ்த்துகின்றனர் ..**

''பயனுள்ள தகவல்களை விளக்கும் இந்த சஞ்சிகை நிலையான சமயப் பணியை
மக்களுக்குத் தரவேண்டும். இளம் சமூகமும், மாணவ உலகும் படித்து ஆன்மீக வாழ்வை
அறிந்து முன்னேற வேண்டும் என ஆசைப்படுகிறேன் ..''

**ப. விக்னேஸ்வரன்,**
**பிரதிச் செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




# கிருஷ்ணன் வீடு ..

மகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தூதராகச் சென்றபோது, அங்கே எதிராளிகளில் ஒருவராகிய விதுரரின் வீட்டிலேயே தங்கும்படியானது. இது எல்லோருக்கும் தெரிந்த கதை. ஆனால் இது எப்படி நடந்தது?

பாண்டவர்களின் தூதனாக கிருஷ்ண பரமாத்மா அஸ்தினாபுரம் செல்கிறார். அன்று அவர் தங்குவதற்கு இடம் தேவை. அப்போது நகரின் வழியில் நடந்தவாறு ஒவ்வொரு மாளிகையின் முன்பும் நின்று --


''இது யாருடைய வீடு? ..'' என்று கேட்கிறார். வீட்டுக்காரர்கள் ஒவ்வொருவரும் வெளியே வந்து -- ''இது என்னுடைய வீடு ..'' என்கிறார்கள்.

விதுரருடைய வீட்டின் முன்னாலும் வந்து நின்ற கிருஷ்ணர் -- ''இது யாருடையது? ..'' எனக்கேட்டபோது, விதுரர் வெளியே ஓடிவந்து -- ''கிருஷ்ணா, இது உன் வீடல்லவா! ..'' என்றார் பக்தி பெருக. கண்ணனும் மகிழ்ந்து உள்ளே சென்றார்.

ஆணவம் இருக்கும் இடத்துள் கண்ணன் வரமாட்டான் என்பதை இச்சம்பவம் விளக்குகிறது.



# யார் வீரன்?



பாரதப்போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது .. கர்ணனும், அர்ஜுனனும் பயங்கரமாக மோதினார்கள். ஒரு சமயத்தில் அர்ஜுனன் விட்ட அம்பு கர்ணனின் தேரை நான்கு அடி தூரத்திற்கு பின்னோக்கி நகர்த்தியது. கோபமடைந்த கர்ணன் பதில் அம்பு விட்டபோது அர்ஜுனனின் தேரை ஒரு அடி மாத்திரமே பின்னோக்கித் தள்ளியது. இதனால் அர்ஜுனன் பெருமையோடு கண்ணனிடம், ''பார்த்தாயா கிருஷ்ணா, நான்கு அடிக்கு அவனை பின்னால் தள்ளினேன். அவனால் ஒரு அடிதான் முடிந்தது ..'' என்றான். கிருஷ்ணர் சிரித்தவாறே கூறினார் .. ''அவனது வெறும் தேரை நீ நான்கு அடிக்கு தள்ளினாய். ஆஞ்சநேயரும், நானும், நீயும் இருக்கும் உனது தேரை அவன் ஒரு அடிதூரம் தள்ளிவிட்டான். அவன்தான் உன்னிலும் சிறந்த வீரன் ..''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதங்களில் வாசனை!

அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றபோது பல தலங்களையும் தரிசித்தான். அப்படியே சேது சமுத்திரத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கே வீழ்ந்து வணங்கியபோது சேதுக்கரை மணலில் துளசிச்செடியின் வாசனை வருவதை உணர்ந்தான். எதையோ புரிந்துகொண்ட அருச்சுனன் அப்படியே அந்த மணலை அள்ளி வணங்கி முகர்ந்தான். ஏனெனில் --

ஸ்ரீ ராமபிரான் தனது திருவடிகளால் தடம் பதித்த இடம் அதுவாகும். எப்போதும் தவறாமல் துளசி அணிந்திருக்கும் கேசவனின் அம்சமல்லவா ராமன்! அந்த வாசனையுடையவன்தானே அவனும்!!

இன்னொன்று --

பாதணிகளை அணிந்தவர்களுக்கு பாதம் மண்ணில் பட வாய்ப்பில்லை. வாசனையும் இருக்காது. ஆனால், ராமன்தான் தனது பாதணியை பரதனிடம் கொடுத்து விட்டானே! ..

## வாசிப்பு இன்பம்!





## பாரதியும், தாகூரும் ..

"ஓடி வருகையிலே -- கண்ணம்மா
உள்ளம் குளிருதடீ
ஆடித்திரிதல் கண்டால் --
உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ ...."



குழந்தை விழுந்து விடுமோ என்ற பதட்டத்தில் விரைவாக ஆவியை அனுப்பி தழுவுவதில் எத்தனை அவசரம்! எத்தனை பாசம்!!

பக்தி இலக்கிய உலகில் இறைவனை காதலனாகவும், பக்தர்கள் தம்மை காதலியாகவும் எண்ணி பரவசிப்பர். கீதாஞ்சலியில் தாகூர் அப்படித்தான் பாடி நெஞ்சை கொள்ளை கொள்கிறார். பாரதியாரோ இறைவனை தனது காதலனாகவும், காதலியாகவும், குழந்தையாகவும் பாடி அமர இன்பத்தில் நம்மை மூழ்கடிக்கிறார் ..

( வாசிப்பு இன்பம் தொடரும் ..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் ..'' என்ற பழமொழி ஔவையார் விஷயத்திலும் ஒருநாள் பலித்தது.



# எல்லா உலகுக்கும் ஈடான விருந்து ..

முதலில் -- தமிழ் மொழியின் முப்பெரும் சக்தியாக விளங்கி, உலக ஆட்சி புரிந்த ஔவையின் புலமையை வீழ்ந்து வணங்குகிறோம் ..

-- ஒருநாள் ஔவையாருக்கு நல்ல பசி. வெயிலோ தகித்தது. இடமோ புல் வேளூர் எல்லை. பெரும் மன்னர்களும், அரண்மனைகளும் தங்கள் வாசலுக்கு இந்த தமிழ்த்தெய்வம் வராதா, வரவேற்று உபசரிக்கும் பேறு கிட்டாதா என்று ஏங்கிக்கொண்டிருக்கும்போது .. பாட்டியோ இப்படித்தான் வேகாத வெயிலில் கால் நடையாகச் சென்று கொண்டிருப்பாள். இதுதான் வழமை.


இன்றும் அப்படித்தான்.

பசியால் கண்மயங்கி, நடை தளர்ந்த ஔவை ஒரு வேளை உணவு இப்போது யாரும் தரமாட்டார்களா என்று நாலாபக்கமும் பார்வையை ஓடவிட்டாள்.

அப்போதுதான் அவரின் கண்ணில் தட்டுப்பட்டான் பூதன்.

பூதன்! ..

ஆம் அவனேதான். நல்ல உழைப்பாளி. விவசாயம்தான் அவனது தொழில். பாடுபட்டு உழைப்பதென்றால் அவனுக்கு நேரம் போவதே தெரியாமலிருக்கும்.. அப்படியொரு முயற்சியாளன். எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் நல்லவன். சூதுவாது அறியாதவன். அவனது மனைவியும் அப்படியே. வறுமை வாட்டினாலும் கணவனது விருப்பம் எதுவோ, அதையே தொண்டாக செய்பவள்.





பூதனின் கண்ணில் ஔவையார் தட்டுப்படவே இன்று அவனது வீட்டில்தான் சாப்பாடு என்பது உறுதியாகி விட்டது. வறுமையும் , புலமையும் கைகோர்த்தால் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்! பூதனும், அவனது மனைவியும் காட்டிய அன்பில் திணறிப்போனது தமிழ் பெருந்தூன்! ..

உணவருந்த அமர்ந்ததார் ஔவையார். பூதன் அன்பு பொங்க உபசரித்தான். மனைவியோ ஆர்வம் பொங்க பரிமாறினாள். வயிறும், உள்ளமும் நிறைந்து பெரும் மகிழ்ச்சியடைந்தார் அம்மை. அவர்களை வியப்போடு நோக்கினார். தன்னை யாரென்றும் கேட்காமல் சேவையிலேயே கண்ணாக இருக்கிறார்களே என்று உருகினார்.

உண்ட களைதீர சற்று உறங்குமாறு பூதன் வேண்ட, ஔவையோ வழமைபோல தனது உள்ளுணர்வை வெண்பாவினால் வெளிப்படுத்தினார் --

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும் — திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டான் ஈது
எல்லா வுலகும் பெறும்.

-- என்பது அந்தச் செய்யுள்.

மிகமிகச் சாதாரணமான உணவு அது. விருந்து என்று சொல்வதற்கே கூசுவார்கள். வரகு அரிசிச்சோறு, வழுதுணங்காய் வதக்கல், மோர், இவற்றை மிகவும் வியந்து பாடுகிறார் ஔவை. அவருடைய உவப்பு, அதனை ''எல்லா உலகும் பெறும் ..'' என்றுகூடச் சொல்லச் சொல்கிறது. அந்த அளவுக்கு பூதனின் அன்பான உபசாரம் இருந்ததென்பது இதன் பொருள்.

வாசிப்பு இன்பம்!

எண்ணும், எழுத்தும் என்றும் சுவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சலம் போக்குவதற்கான ஒரு


# கோலம்!


ஸ்ரீ ராமரைப் பிரிந்து இலங்கையில் சீதாப்பிராட்டியார் மனத்துன்பமடைந்த வேளையில் ராமனை நினைத்து இந்தக் கோலத்தைத்தான் போட்டார். அதனால் மனஉறுதியோடு இருக்க முடிந்தது என்று கூறப்படுகிறது. அதனால் மங்கையர்கள் மனச்சஞ்சலத்திலிருந்து நீங்க இதனை வாசலில் போடுவார்கள்.

மிகவும் இலகுவான முறையில் இதனைப் போடுவதற்கான பயிற்சி இதுதான்.

மொத்தமாக இதுபோல புள்ளிகளை முதலில் வைத்துவிட்டு ஆரம்பித்தால் இந்த

-- ஸ்ரீ இதய கமலம் --





கோலத்தின் இறுதி முனைகளில் இதய கமலம் என்று எழுத்துக்களை இடவேண்டும். மனம் சஞ்சலத்திலும், சோர்விலும் இருக்கும்போது இந்தக் கோலத்தை இடும் வேளையில் மனமும், உடலும் சுறுசுறுப்பாகிறது என்கிறது கோல சாஸ்திரம்

## கோலம் போடுவதால் கிடைக்கின்ற நன்மைகளும் உண்டு ..

கோலமிட்டிருக்கும் இடங்களைக் காணும்போது சுபமான பொழுதுகளை வீட்டில் அனுபவிக்கலாம். மங்கள காரியங்களை இல்லத்துக்கு வாசல் கோலங்கள் விரைந்து வரச்செய்கின்றன.


கோலங்கள் சுபசின்னங்களில் ஒன்று. மகாலட்சுமி விரும்பி வாசம் புரிவது.

பசுவின் சாணம் லட்சுமி தேவியை குறிப்பதால் மகாவிஷ்ணுவையும் வீட்டில் வாசம்புரிய வைக்கிறது.

அரிசி மாவில் கோலமிடுவது புண்ணியமாம். மாதம் ஒரு கோலம் என்று வழிகாட்டப்பட்டுள்ளது. அதன் அர்த்தங்களும், பலன்களும் இருக்கின்றன. பகுதி பகுதியாக அவற்றை தெரிந்துகொள்ளலாம் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் சமய அறிவுப்போட்டி இல: 12



அன்பான மாணவர்களே,

சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த 'பக்தி விஜயம் ..' வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

இல: 10 சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். அனைவரையும் பாராட்டுகிறோம் ..

## இல: 10 போட்டிக்கான விடைகள் ..

| | | |
|---|---|---|
| 01. படைத்தல், | 02. வால்மீகி, | 03. ''பித்தா! .. '', |
| 04. பிள்ளையார், | 05. நாகபூஷணி அம்மன், | 06. அவல், |
| 07. அனுமன், | 08. 12 , | 09. பொன்னடிகள், |
| 10. அகத்தியர் | | |

1ம் பரிசு : **பார்த்தீஸ்வரன், அல் மதீனா மகா வித்தியாலயம், மகோ**

2ம் பரிசு : **அ. மாதுரி, முகத்துவாரம் இந்துக்கல்லூரி, கொழும்பு**

3ம் பரிசு : **ஹரிஸ்கானன், இந்துக்கல்லூரி, திருக்கோணமலை**

## இம்மாத வினாக்கள் — இல: 12

01. திருக்கேதீஸ்வர அம்மையின் பெயர் .................. ஆகும்
02. கீரிமலை ............................ மாவட்டத்தில் இருக்கிறது
03. மாங்கனி வேண்டி ...................... உலகை சுற்றி வந்தார்
04. மழையின் தெய்வம் ......................... ஆவார்
05. ''காதலாகிக் கசிந்து ................ மல்கி ..''
06. சீதையைக் கவர ....................... மான் வடிவில் தோன்றினான்
07. பாரதப்போரில் அருச்சுனனுக்கு ..................... தேர் சாரதி ஆனார்
08. சிவனும், உமையும் இணைந்த வடிவம் ...................... ஆவார்
09. அதியமானுக்கு ஔவையார் ....................... உண்ணக் கொடுத்தார்
10. சிலப்பதிகாரத்தை .................... அடிகள் இயற்றினார்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

*சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள்.*

அனுப்பவேண்டிய முகவரி :

**ஆசிரியர்,**
**"பக்தி விஜயம் ."**
**555, புதுத்தெரு,**
**மன்னார்.**

(இப்பக்கத்தை கத்தரிக்க வேண்டாம் ..
வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலம் தரும் நாட்களும், விரதங்களும்...



06.06.2013
வியாழக்கிழமை
பிரதோஷ விரதம்

08.06.2013 -- சனிக்கிழமை
அமாவாசை விரதம்

12.06.2013 -- புதன்கிழமை
சதுர்த்தி விரதம்

19.06.2013 -- புதன்கிழமை
ஏகாதசி விரதம்

21.06.2013 -- வெள்ளிக்கிழமை
பிரதோஷ விரதம்

23.06.2013 -- ஞாயிற்றுக்கிழமை
பூரணை விரதம்

26.06.2013 -- புதன்கிழமை
சங்கடஹர சதுர்த்தி

03.07.2013 -- புதன்கிழமை
ஏகாதசி விரதம்

04.07.2013 -- வியாழக்கிழமை
கார்த்திகை விரதம்


05.07.2013 -- வெள்ளிக்கிழமை
பிரதோஷ விரதம்

07.07.2013
ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை விரதம்

12.07.2013
வெள்ளிக்கிழமை
சதுர்த்தி விரதம்

13.07.2013 -- சனிக்கிழமை
ஸ்கந்த பஞ்சமி,
இரவு நடேசர் அபிஷேகம்

14.07.2013
ஞாயிற்றுக்கிழமை
குமார ஷஷ்டி விரதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வீகத் தகவல்கள்....

# துளசி!..

மலர்களும், இலைகளும் தெய்வ வழிபாட்டில் தம்மை எந்த அளவுக்கு இணைத்துக்கொண்டு வாழ்கின்றன என்பதை அறியும்போது மனிதர்களாகிய நாம் அவைகளிடம் தோற்றுப்போவோம் ..


அதிலும் துளசியின் மகிமையை அறியும்போது அதன் வாசனையைப்போலவே புகழையும் கொண்டிருக்கிறது. ஹரி, திருத்துழாய், துளவு, குல்லை, வளம், விருத்தம், பிருந்தா என்றெல்லாம் துளசிக்கு பல பெயர்களுண்டு. சகல புண்ணிய தீர்த்தங்களும் துளசிச்செடியின் அடியில் சுரக்கின்றன என்பது சிலிப்பூட்டுகின்ற மேலுமொரு தகவல்.

அதுமட்டுமல்ல, அச்செடியின் இடைப்பகுதியான தண்டில் எல்லா தேவதைகளும் வசிக்கின்றனவாம். அப்படியான துளசி வளரும் இடமே புண்ணியம் நிறைந்ததாய் இருக்கும். அதனை வலம் வருவது, பூஜிப்பது, நீரூற்றி வளர்ப்பது அனேக பலன்களைத் தரும்.

ஞாயிறு, வெள்ளி, ஏகாதசி, யுகாதி போன்ற நாட்களில் செடியிலிருந்து துளசியைப் பறிக்கலாகாது. பறிக்கும் வேளைகளில் நகம் காயப்படுத்தாதவாறு எடுத்துக்கொள்ள வேண்டும்.

துளசியில் பல வகைகள் உள்ளன. நற்றுளசி, கருந்துளசி, நாய்துளசி, செந்துளசி, கல்துளசி, முல்துளசி என்றெல்லாம் இருக்கின்றன. இதில் கருந்துளசியை கிருஷ்ண துளசி என்றும், நற்றுளசியை ராமர் துளசி என்றும் பாராட்டுவர். திருமால் துளசி மாலையை விரும்பி அணிவதால் அவருடைய உடலில் திருத்துழாய் வாசம் இருந்துகொண்டே இருக்குமாம். திவ்வியப்பிரபந்தம், இலக்கியங்கள், வில்லிபாரதம் போன்றவை இது பற்றி சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.





துளசி பெருமாளுக்கும்,
வில்வம் சிவனுக்கும் பிடித்தமானவை
அதனால் --
துளசி -- ஹரிக்கொழுந்து என்றும்
வில்வம் -- சிவக்கொழுந்து
என்றும் போற்றப்படுகிறது ..

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் ஸ்ரீ ஆண்டாள் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவனத்தில் துளசிச்செடியின் அடியில் இருந்துதான் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டாள்.

பிருந்தாவனம் என்ற சொல் துளசிக்காட்டைக் குறிப்பதாகும். மகான்கள் முக்தியடைந்த இடங்களிலும் துளசிச்செடி வளரும். அப்படியான இடங்கள் வழிபடப்படும்போது பிருந்தாவனம் என்று அழைக்கப்படுகிறது. சாளக்கிராம மூர்த்தத்துக்கு ஒரு துளசி தளத்தை அர்ப்பணிப்பதும், சிவாலயத்துக்கு ஒரு வில்வ தளத்தை அர்ப்பணிப்பதும் நற்பயனையும், ஞானத்தையும் தரும் என்பர். மாடங்களிலும், முற்றத்திலும் தூய்மையான முறையில் துளசியை பயபக்தியோடு பராமரிக்க வேண்டும். துளசி கல்யாணம் என்ற சடங்குகூட பூஜையாக அதற்கு நடத்தப்படுவதுண்டு.

சங்கீத மும்மணிகளில் ஒருவரான ஸ்ரீதியாகராஜர் துளசியின் அற்புதம் பற்றி மூன்று கிருதிகளை இயற்றியிருக்கிறார். ஸாவேரி ராக கிருதியில் --

''ஏ, துளசி உனக்கு நிகரான தெய்வமில்லை. உன்னிடம் வைகுண்டமும், வேதமும், தேவர்களும் விளங்குகிறார்கள் ..'' என்று பாடுகிறார்.

இத்தகைய மகிமை வாய்ந்த துளசியை வீடுகளில் வளர்த்தும்:, பூஜித்தும் வழிபடுவதற்கு செலவேதும் கிடையாது. ஆனால் கிடைக்கும் பலனோ பெருமளவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக தெய்வீகத் தொடர்

உபநிஷத மந்திரங்களின்
விளக்கத்துடன்
திருப்பெருந்துறையில் அருளிய

# சிவபுராணம்



## அனாதி முறைமையான பழமையோடு அருளும் சிவபிரான்



**14. மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி**

மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி

மாயையின் விளைவு ஆகிய பிறப்பு இறப்பு என்னும் மாறுபாட்டை அகற்றுகிற இறைவனது திருவடிக்கு வணக்கம். இயற்கை அல்லது பிரபஞ்சத்துக்கு மாயை என்பது மற்றோர் பெயர். ஒரு கணப்பொழுதில் இருப்பதுபோன்று அடுத்த கணப்பொழுதில் எது இருப்பதில்லையோ அது மாயை. எப்பொழுதுமே இல்லாதது எனச் சிலர் மாயையைத் தவறுதலாகப் பொருள் படுத்துகின்றனர்:, அது சரியன்று.

**15. சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி**

சீர் ஆர் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி

மேன்மை பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் நம் கடவுளின் திருவடிக்கு வணக்கம்.

**16. ஆராத வின்ப மருளுமலை போற்றி**

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

தெவிட்டாத ஆனந்தத்தை ஊட்டியருள்கின்றவனும், மலைக்கு ஒப்பானவனும் ஆகிய சிவனுக்கு வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபநிஷத மந்திரம் -- 08
## விளக்கவுரை

அஸுர்யா நாம தே லோகா அந்தேன தமஜாவ்ருதா : !
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யேகே சாத்மஹனோ ஜனா : !

அஸுரப் பிறவிகள் அக்ஞான இருளில் மூடப்பட்டுள்ளன. யாரெல்லாம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கின்றார்களோ அவர்கள் இறந்தபின் அவ் அஸுர லோகத்தை அடைகின்றனர்.

ஐம்பொறிகள் வாயிலாக இன்ப நுகர்ச்சியிலேயே சதா உழன்றுகொண்டிருப்பவர்கள் அஸுரர்கள் ஆவார். ஆத்மஞானத்துக்குரிய பெருவாழ்வைப் புறக்கணிப்பதால் அன்னவர்கள் அருள் துறைக்குப் புறம்பானவர்கள் ஆகின்றனர். வீணில் பிறந்து இருந்து இறந்தவர்கள் ஆகின்றனர். மறு பிறவிகளில் அவர்கள் மேலும் கீழ்மையுறுவர்.

புராணங்களில் பகர்ந்துள்ளபடி அஸுரர் என்பார் ஒரு தனி இனத்தினர் அல்லர். மக்களில் சிறு நெறி செல்பவர் அஸுரர் ஆவர். பிறவிப்பெருங்கடலில் அவர்கள் அலைக்கழிகின்றனர் ..

விளக்கின் வெளிச்சத்தைக்கொண்டு விளக்கு அறியப்படுகிறது. சூரிய வெளிச்சத்தைக்கொண்டு சூரியனை அறிகிறோம். அங்கனம் இறைவனுடைய அருளைக்கொண்டே .இறைவனை அறிகிறோம். அவனை அறியுமளவு நாம் அவனுக்கு ஆட்படுகிறோம். அப்படி ஆட்படுவது வணக்கமாகிறது.



**17. சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா**
**18. லவனரு ளாலே யவன்றாள் வணங்கி**

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி சிவபெருமான் யாண்டும் என் மனதில் வீற்றிருப்பதால் அவனது திருவருளைத் துணையாகக்கொண்டு அவனது திருவடியைத் தொழுது ..

அடுத்த இதழில் சிவ அனுக்கிரகத்துடன்,
சிந்தை மகிழச்
சிவபுராணந்தன்னை ..
(விளக்கவுரை)

நன்றி : **ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்,**
திருவாசகம்
புண்ணிய நூலிலிருந்து

உதவி : சிவ அடியார்
க. ஜீவானந்தம், மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய அற்புதங்கள்!

# அண்டத்தில் ஒலிக்கும் ஒலி!


# ஓம்

இந்த பூமியில் ஒவ்வொன்றும் இன்னொன்றின் மீதான ஆதாரத்திலேயே தங்கி நிற்கிறது. நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்சபூதங்களே இந்த புவனத்தின் ஆதாரம்.

கோடிகளான வருஷங்களை கடந்து நிற்கின்ற இப்பிரபஞ்சத்திலே மனித வாழ்வு மிகச்சிறிய புள்ளி. இந்த மனித வாழ்வை தாங்கி நிற்பதற்காகவே இறைவன் வேதங்களை தந்தார். வேதங்களின் அடிப்படை அதன் பிரணவ நாதமாகிய 'ஓம் ' எனும் ஒலி. அந்த ஓம் என்பதே பரம்பொருளின் அடையாளம்.

ஆதியும், அந்தமும் இல்லாத பிரபஞ்ச காட்சிகளில் அதன் ஆதாரமாகிய ஓம் என்ற ஒலி நம் உள்ளேயும் ஒலிப்பதை நாம் கேட்கலாம் !..


அண்டமெல்லாம் ஒரு பின்னணி ஓசை மிக மெதுவாக ஒலிப்பதை ஆய்வாளர்கள் கட்டுரைகளில் கூறியுள்ளனர். எந்த பொருளிலும், நிகழ்விலும், உணர்விலும் ஒரு ஒலி இல்லாமல் இருக்காது. நமது சுவாசத்தில்கூட இருக்கிறது. கடும் நிசப்தம் என்று நமக்குத் தோன்றும் இடத்தில்கூட ..ம்ம் .. என்ற அமுக்கமான சத்தம் இருப்பதை அவதானிக்கலாம். ஏனெனில் தவிர்க்க முடியாத 'ம் ..' என்ற அந்த ஒலி புவனத்தோடு இரண்டறக் கலந்தது. 'ஓம் ..' எனும் பிரணவத்தின் ஒலி இல்லாமல் எந்த படைப்புகளும் இல்லை. அப்படியிருக்க சாதாரண நம் மானிட வாழ்வில் அது இல்லாமலிருக்க முடியுமா? ..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஓம் .’ என்ற
ஒலியில் ‘அ, உ, ம் ’
என்ற மூன்று எழுத்துக்கள்
உள்ளன. இவைகளே எல்லா
எழுத்துக்ளுக்கும் முன்னோடி
என்று சொல்லலாம். இந்த மூன்று
எழுத்துகளும் மும்மூர்த்திகளை
குறிப்பன. ‘அ’ என்றால் பிரம்மா,
உலக சிருஷ்டியை செய்பவர். ‘உ ’
என்றால் விஷ்ணு, எல்லாவற்றையும்
காப்பவர். ‘ம் ’ என்றால் சிவபெருமான்,
அழிப்பவர். இந்த மூன்று எழுத்துகளும்
கடந்தகாலம், நிகழ்காலம்,
எதிர்காலத்தை விளக்குகின்றன.
இம்மூன்று எழுத்துக்களும் கலந்து
ஒலிக்கும் ‘ஓம்’ காலங்களுக்கு
அப்பாற்பட்ட ‘அநன்தம்’ என்ற
நிலையைக் குறிக்கும்.
அந்த ‘அநன்தம் ’ தான்
சகல ஜீவராசிகளையும்
காப்பாற்றிக்
கொண்டிருக்கும்
பரம்பொருள் ..







கூடவே பிரம்ம ஞானத்திற்கும் ஓம் அடையாளமாகச் சொல்லப்படுகிறது. எப்படியெனில், நம்முடைய உணர்வுகள் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. விழிப்பு நிலை, கனவு நிலை, கனவுகள் அல்லாத ஆழ்ந்த தூக்க நிலை என்ற மூன்று நிலைகளோடு இன்னொரு பிரிவான நான்காவது நிலையும் இருக்கிறது. அது இம்மூன்று நிலைகட்கும் அப்பாற்பட்ட நிலை. விழிப்புணர்வு நிலையை பிரம்மா என்றும், கனவு நிலையை விஷ்ணு என்றும், கனவுகளற்ற ஆழ்ந்த தூக்க நிலையை ருத்ரன் என்றும் சொல்வார்கள். இம்மூன்று நிலைக்கும் அப்பாற்பட்ட நிலையே ஓம் ’ எனப்படுகிறது.

மந்திரம் மிக்க இந்த ஓம் எனும் சொல் எந்த மொழிக்கும் சொந்தமானதல்ல. ஏனெனில், எல்லா மொழிகளும் ஓம் ’ இல் இருந்து உருவானவையே. இந்த பிரணவச்சொல் எல்லா உயிருள்ள, உயிரற்ற பொருட்களையும் தன் ஒலியால் இயக்கக்கூடியது. நாம் மூச்சை உள்ளே இழுத்து, சற்று நிறுத்தி, பிறகு வெளியே விடுகிறோம். இந்த நிகழ்வு 'ஓம் ' என்னும் பிரணவ நாதத்தின் அற்புதமாகும். இந்த மூச்சு நிகழ்ச்சி நின்று விட்டால் உயிர் அசைவின்றி ஸ்தம்பிக்கிறது. ஒவ்வொரு உயிரின் இயக்கத்திற்கும் 'ஓம் ' என்ற கண்ணுக்குத் தெரியாத அதிசய அதிர்வுதான் காரணம் என்பதை நம் உள்ளும், வெளியிலும் தெளிவாக உணர முடியும் ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருக்கேதீஸ்வரர் மகோற்சவம் ..

திருக்கேதீச்சர நாதரின் தரிசனம் என்பது பிறவிப்பயனாக பேரின்பம் தரும் அனுபவம் என்பதை அறியாதார் இல்லை.
அதிலும் அவருக்கு மகோற்சவம் என்றால் உலக ஜீவராசிகள் அனைத்துக்குமே மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரளும். அந்நாட்களில் அச்சிவபூமியிலே சிலிர்தெழுகின்ற சிவ ஆளுமைக்குள் மயங்காதவர்கள் யாருமே இருக்க முடியாது.

அழகுபொங்க காட்சி தரும் கௌரியுடன் வாசம் புரியும் கேதீச்சர நாதருக்கு விழா என்றால் -- மேகங்களும் கீழிறங்கி கூட்டமாக சூழ்ந்து நிற்கும். வனத்திலிருந்து விலங்குகளும். பறவைகளும் ஆலயத்தை எட்டிப்பார்க்கும். பூமரங்களும், வாழைகளும் ஈசனுக்கென்றே உற்சாகமாக செழித்துத் தயாராகிவிடும். அப்படியொரு அன்பினால் அணைப்பவர் இந்த கேதீச்சர நாதர். அவருடைய உற்சவ நாட்களிலெல்லாம் மாந்தைக் கரையோரத்தை கடலலைகள் மோதும்போது ''அரோகரா ..'' என்ற ஒலிதான் கேட்கும்.

திருக்கேதீஸ்வரப் பெரும் ஆலய மகோற்சவம் இம்முறையும் மகா சிறப்பாக நடந்து, மனங்களை நிறைத்தது. எந்நாட்டவர்க்கும் இறைவனாக இத்தலமதில் நிலைத்து அருள்கின்ற இறைவனுக்கு எக்குறையும் வைக்காமல் உற்சவம் தந்து மகிழ்வித்தனர் அடியார்கள். வழமைபோல மூத்த கணபதியின் ஆசியுடன் ஆரம்பமான பூஜைகளோடு மகோற்சவத்தின் வழமையான கிரியைகள் தொடங்கின. முதல்நாள் நிகழ்வாகிய கொடியேற்றப் பெருவிழாவில் தொடங்கிய திருவிழா தனது பூரண சம்பிரதாயங்கள் சகிதம் நிறைவான உற்சவத்தைக் கண்டது. விஷேட பூஜைகள், அபிஷேகங்கள், நிகழ்வுகள் யாவும் அடியார்ளை சொல்லொணா மெய்யின்பத்தில் நிதமும் ஆழ்த்தின.



**காலைப்பூசை, வசந்த மண்டப அலங்கார பூசை, பஞ்ச மூர்த்திகளின் வீதியுலா, மாலைப்பூசை, கொடித்தம்ப பூசை என்று உற்சவ நாட்களெல்லாம் சிவப்பேறுதான். கருத்தாக வேதம் பொழிந்து ஐயனை குளிர்வித்த அந்தண சிரேஷ்டர்களால் பதின்மூன்று நாட்களும் திருக்கைலாய அனுபவமே! ஆலய நிர்வாக உற்சவ ஒழுங்கமைப்பும், தொண்டர்களின் களிப்பான பங்களிப்பும் அடியார்களை பெருமானுடன் ஒன்றினைக்க பெரிதும் உதவின. அரஹர மகாதேவா! ..**


பாலாவிக்கரையில் நீராடி, பாடல் பெற்ற தலத்தில் இறையை அனுபவித்து, அடியார் மடங்களில் அன்னமருந்தி, வீடு திரும்பும் பெரும் பாக்கியம் காத்திருக்கிறது இங்கே !தாமதிக்காமல் சென்று மோட்ஷம் பதிவு செய்ய வேண்டியதே நம் வேலை ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் புராண அறிவு -- போட்டி இல : 01 -- முடிவு

பரிசு பெறுபவர் : --

**செல்வன். ந. மதீசன்,**
அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,
இராமநாதபுரம் மேற்கு,
கிளிநொச்சி



இக்காட்சிக்கான விளக்கத்தை இந்த மாணவர் தனது நடையில் இவ்வாறு தருகிறார் ..

இந்த படம் வாலி வதம் ஆகும். வாலிக்கும், சுகரீவனுக்கும் சண்டை நடைபெற்று, இராமபிரான் வாலியை மறைந்திருந்து தாக்கினார். இராமபிரானின் அம்பு மார்பில்பட்டு விழுந்து கிடக்கும் வாலி --''என்னை ஏன் மறைந்திருந்து கொன்றீர்கள் .. தர்மவான்கள் செய்யும் காரியம் இதுதானா? '' என்று பலவாறாக இராமபிரானிடம் தன்னுடைய கருத்துகளைச் சொன்னான்.


இதற்கு இராமபிரான் பலவாறாக தனது நிலையை விளக்கிக் கூறினார். அதாவது .. ''தர்மம் பற்றிக் கதைக்கும் நீயோ சொந்த சகோதரனுக்கு துரோகம் செய்யலாமா? அடுத்து நீ பெற்ற வரத்தின் பயனாக உன்னுடன் போர் செய்யும் என்னிடம் இருந்து அரைவாசி சக்தி உனக்கு வந்து விடும் ..'' '' அப்படியெனில் நீதியை, தர்மத்தை எப்படி நிலை நாட்டுவது .. அவதாரமெடுத்ததன் நோக்கமே தர்மத்தை நிலைநாட்டுவது ..'' என்று கூறியதும் வாலி அதனை விளங்கிக்கொண்டு இராமரை கைகூப்பித் தொழுது .. ''பரம்பொருளாகிய உங்கள் கையால் நான் இறப்பதற்கு என்ன மாதவம் செய்தோனோ ..'' என்று கண்ணீர் மல்க சொல்லி வணங்கினான்.

இப்போட்டியில் பங்குபற்றி ஆர்வத்தோடு
எழுதியிருந்த மாணவர்களை வியந்து,
பாராட்டுகிறோம்.அனைவருக்கும் வாழ்த்துக்கள்

---

## மாணவர் புராண அறிவு போட்டி இல : 03

இந்த காட்சியின் விபரத்தை சுருக்கமாக விளக்கி, எழுதி அனுப்பவும். பரிசுகள் உண்டு .. (பாடசாலை முகவரியிட்டு அனுப்பவும்.)



ஆசிரியர்,
'பக்தி விஜயம் ..'
555, புதுத்தெரு,
மன்னார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி

தெய்வீக தகவல் அறிவோம்!

# தெய்வங்களைச் சுமக்கின்ற வாகனங்களும், அவற்றின் தத்துவங்களும்




பறவைகளும், விலங்குகளுமே கடவுளின் ஊர்திகளாக திகழ்கின்றன! எனினும், அவை மனித வாழ்வுக்கான உயர்நிலைகளை உயர்த்துவதைப் பாருங்கள் ..

## கஜ வாகனம்

பண்டன் எனும் அசுரனுடன் போர் செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை அம்பிகைக்கு ஏற்பட்டது. அப்போது தனது அங்குசத்திலிருந்து ஒரு சக்தியை தோற்றுவித்தாள். குரோதம், மற்றும் ஞானத்தின் வடிவாகிய அங்குசத்திலிருந்து தோன்றிய அந்த சக்தியை 'ஸம்பத்கரி' என்று அழைத்தனர். இவளே யானைப்படையின் தலைவி. 'ரணகோலாகலம்' என்ற இந்த யானையே அவளின் வாகனமாகியது.

'ஓம் ' என்னும் பிரணவத்தை மயில் நினைவூட்டுவதுபோல யானையும் தனது தோற்றத்தால் காட்டுகிறது. சிவனார், திருமால், கந்தன், அம்பாள், ஐயனார் போன்ற பல தெய்வங்களுக்கு யானை வாகனம் உண்டு ..

## குதிரை வாகனம்



எவராலும் வெல்லமுடியாத 'அபராஜிதம் ' என்ற குதிரை அச்வாரூடாவின் வாகனமாகியது. அம்பிகை தனது பாச ஆயுதத்திலிருந்து தோற்றுவித்த சக்தியே 'பரிஊர்வாள் ' என்று பொருள் படும் அச்வாரூடா தேவி ஆவாள். இவளே அம்மனின் குதிரைப் படையின் தலைவி. சிவபெருமான் மாணிக்கவாசகருக்காக குதிரை வணிகராக கோலம் பூண்டார். அப்போது எம்பெருமான் குதிரைமீது வந்தார். அக்கோலத்தில் காட்சி தரும் ஈசனை 'அச்வாரூட மூர்த்தி ' என்று அழைப்பர்.

'குதிரைச்சாமி ' என்று பாமரர்கள் அழைக்கும்போது மெய்சிலிர்க்கும் ..

## காமதேனு வாகனம்




ஐதீகம், சத்வ குணம் என்ற மென்மையான நல்லியல்புகளைக் கொண்ட பசு காமதேனு. அதன் உடலில் எல்லா தேவ சக்திகளும் குடிகொண்டிருப்பதாக வேதம் கூறுகிறது. கேட்கின்ற அனைத்தையும் அளிக்கின்ற ஆற்றல் கொண்டது இது.

அம்பிகையானவள் அனைத்து தேவர்களையும் தனது மேலாண்மையால் கட்டுப்படுத்துகிறாள். அடியார்களின் தேவைகளை அவள் விரைந்து நிறைவேற்றுகிறாள். இக்கருத்தை உணர்த்தும் வண்ணம் காமதேனுவையும் தனது வாகனமாக செலுத்துகிறாள் தேவி ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்கை வாகனம்



சனி பகவானின் சிறப்பு வாகனம் காகம். தமிழ்நாட்டில் திருநல்லாறில் சனிப்பெயர்ச்சி நாட்களில் தங்கக் காக்கை வாகனத்தில் சனி பகவான் உலா வரும் உற்சவம் நடைபெறுகிறது.

காக்கையிடம் ஒற்றுமைக் குணம் உண்டு. அது பேதமும் பார்ப்பதில்லை. அதன் செயல்களுக்காக அதனை விரும்புவோரும், வெறுப்போரும் உள்ளனர். போற்றுதல், தூற்றுதல் இரண்டுமே காகத்திற்கு கிடைக்கும். சனி பகவானுக்கும் அதே நிலைதான். அலரைப்போல கொடுப்பவரும் இல்லை. கெடுப்பவரும் இல்லை. போற்றுபவரே தூற்றவும் செய்வர். ஆனால் தனது பார்வையால் மக்களுக்கு இன்னல்களைக் கொடுத்து அவர்களைப் பக்குவமடையச் செய்பவர் அவர். பிறகு செல்வத்தையும் வழங்குவார். பிறரை நன்மைக்கும், கஷ்டத்திற்கும் உட்படுத்தும் காரணமாக காக்கையை வாகனமாக ஏற்கிறார் ..




## புலி வாகனம்

தனது தாயின் தலைவலி தீர புலிப்பால் தேவைப்பட்டதால் வம்புலியை அடக்கி, அதன்மீது ஆரோகணித்து வந்தார் மணிகண்டன்.

பிரம்மச்சாரியான ஐயப்பன் புலி வாகனத்தில் ஏறிவந்து அடங்காப் புலன்களை அடக்கும் நெறியை உணர்த்தினார். ஐம்புலன்களானவை சீறிப் பாயும் அடங்காத புலியைப் போன்றவை. பிரம்மச்சரியத்தால் வெற்றி கொள்ளத்தக்கவையே அவை என்பதை உணர்த்த அவர் புலிமீது ஆரோகணிக்கிறார் ..

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## சிம்ம வாகனம்



அம்மனின் சிறப்பு வாகனம் சிங்கம் .. 'சிங்கத்திலேறி, சிரித்தெவையும் காத்திடுவாள் ..' என்று பாரதியார் பாடியிருக்கிறார். எளிதில் எவராலும் நெருங்க முடியாத வீரமுடையது சிங்கம். தனது கர்ஜனையாலேயே அனைத்தையும் அடக்கியாளும் திறமையும், கம்பீரமும் கொண்டது அது. பசி இலலாத நேரத்தில் வேட்டையாடி உயிர்களை வதைக்கும் வழக்கம் இல்லாதது. தர்மம் காப்பது.

தனது மேலான்மையையும், தர்மத்தையும், இயல்புகளையும் உணர்த்திடவே சிங்கத்திலேறி அம்பிகை வருகிறாள். சூரனை தனது வாகனமாக முருகன் ஆக்கிக்கொண்டதைப்போல சூரனின் தம்பி சிங்கமுகாசுரனை வாகனமாக்கி தனது தாயிடம் தந்துவிட்டான் குமரன். அம்பாள் அமருகின்ற ஆசனம் 'ஸ்ரீமத் சிம்மாசனம்' என்றே போற்றப்படுகிறது. துர்க்கை முதலான சக்திகளின் வடிவமாக சிம்மம் விளங்குகிறது ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய ஆனியிலே ..



சிவபெருமானின் திருமண வைபவத்தால் பங்குனி உத்தரத்தால் பங்குனி மாதம் சிறப்புப் பெற்றது அல்லவா! அதுபோல்தான் நடராஜப்பெருமானின் உற்சவத்தினால் இங்கே ஆனி உத்தரம் சிறப்படைகிறது. அதிலும் சிதம்பரத்திலே திருநடனம் புரிகின்ற நடராஜருக்கு நடத்தப்படும் வைபவம் உலகப்பிரசித்தமானது ..

இது மட்டுமா .. ஆனி மாதத்தின் சிறப்புகளை சொல்லிக்கொண்டே போனால் முடிவிருக்காது. அப்படிப்பட்ட மாதத்தின் சிறப்புக்களை அறிந்தோமானால் பயன் மிக்க வாழ்வு நம் அருகில்தான் ..

உத்தர மண்டலம் சக்தி மிக்கது. அதில் சிம்ம, கன்னி ராசிக்காரர்களுடைய நட்சத்திரங்கள் வசிக்கின்றன!

நமது பண்டிகைகளில் கற்பிக்கும் குருவுக்கென்றும் பண்டிகையுண்டு. நமது முன்னோர்களால் சிறப்பாக இது அனுட்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த குரு பூர்ணிமை ஆஷாட ( ஆனி, அல்லது ஆடி) மாதத்தில் வருகின்றதால் வியாச பூர்ணிமை என்றும் கூறுவர்.

வேதாந்த, சூத்திரங்களின் தந்தையான வியாச பகவானை இந்த தினத்தில் பூஜிப்பார்கள். ஆனால் நமது நாட்டில் இந்த வழமை மிகக்குறைவு. பக்குவம் வாய்ந்த ஆசிரமங்களில் முதுநிலை சந்நியாசிகள் சிலவேளைகளில் இதனை செய்துவரக்கூடும்.

தமது வித்தியா குருவை வணங்கி அவர்களுக்கு பாத பூஜை செய்யும் வழமை இந்தியாவில் இருந்து வந்ததாகும் ..

மழைக்காலத்துக்கு இந்த மாதம்தான் ஆரம்ப வாயிலாகும். இதனால் சந்நியாசிகள் தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு ஒரே இடத்தில் தங்கியிருப்பார்கள். இது அவர்களின் நியதி ஆகும். சாதுர் மாதம் என்பது, குருபூர்ணிமைநாள் முதற்கொண்டுதான் ஆரம்பிக்கிறது.

அவர்கள் இப்படி தொடர்ந்து நான்கு மாதங்கள் தங்கியிருப்பதற்கான காரணம், நமது சமயம் போதிக்கின்ற கருணைதான். இக்காலத்தில் கால்நடையாக யாத்திரை செல்லும்போது பூச்சி போன்ற அப்பாவி ஜீவன்கள் பாதங்களில் சிக்கி மரணமடைய நேரிடும். ஜீவ ஹிம்சையை தவிர்ப்பதை முக்கியமாகக்கொண்டு அதனை இப்படி உணர்த்துகிறார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம்

நான்கு மாதங்களையும் நான்கு பட்ஷங்களாக கருதி, இந்த ஆஷா பூர்ணிமையில் தொடர்ந்து ஒரே ஊரில் சாதுக்கள் தங்குவதன் மூலம் இந்த ஆனி மாதத்தின் சிறப்பை தெரிந்து கொள்ளலாம் .

கோடை வெயிலுக்கு பேர்போன மாதம் இது. இந்தியாவில் பல மாநிலங்களில் உஷ்ணம் பிளந்து தள்ளுவதை ஊடகங்கள் விஷேச செய்திகளாக தருகின்றன. அதனால் அங்கே பாடசாலை விடுமுறைகள் இரண்டு மாதங்களுக்குக்கூட நீடிப்பதுண்டாம்!

## பெற்றோரை மதித்து, வணங்கும் மாதம் ..

நமது முதலாவது தெய்வங்கள் அன்னையும், தந்தையுமாம். மூன்றாவது தெய்வமாவார் குரு. தாயிடத்தில் அன்பும், தந்தையிடத்தில் உடம்பும், குருவிடம் இருந்து அறிவும் கிடைப்பதால் முதலில் வழிபடத்தக்கவர்கள் இவர்களாகிறார்கள். இதனை திருமூலரும் சுவைபடச் சொல்லியிருக்கும் பாங்கு வாசித்து இன்புறத்தக்கது.

## சாதுர்மாச விரதம் ..

இந்த மாதத்திலே வருகின்ற சாதுர்மாச விரதம் குடும்பத்தவர்கள் அனுட்டிக்க மிகவும் ஏற்றது. துறவிகள் இதனை இன்னும் அக்கறையோடு நோற்பார்கள். இந்த நான்கு மாதங்களிலும் பகவான் யோக நித்திரையில் ஆழ்ந்திருப்பார். நான்காவது மாதத்தின் முடிவிலே அவர் விழித்தெழுகிறார். இதனால் இவ்விரதத்தை ஆரம்பிக்கும் தினமாகிய ஏகாதசி 'சயன ஏகாதசி' என்றும், முடிவடையும் துவாதசி 'பிரபோத துவாதசி' என்றும் போற்றப்படுகிறது.

## ஆசிரியரே தெய்வம் ..

எத்தனை கலைகளைத் தெரிந்து வைத்திருந்தாலும் ஒரு குருவிடத்தில் உபதேசம் பெற்று அதை முறைப்படி கற்பதில்தான் பலனிருக்கிறது. எந்த வல்லவரும் தனது உண்மையான தகமையை அறிந்தவராகார். ஒரு குருவைச் சரணடைந்து அவரிடத்தில் போதனை பெறும்போது மட்டுமே அது சாத்தியமாகிறது. ஒரு மனிதனின் சக்தியை அவனின் குருவே சரியாக அறிபவர் ஆவார்.

குருவிடம் சரணடைந்து, அவரிடம் பக்தி செலுத்தும்போது [illegible] கற்றுத்தராத கலைகள்கூட [illegible] க் கிடைத்து விடுகிறது

## ஆசிரியரின் மகிமையை உணர்த்தும் ஆனி மாதம் .



குருவின் மனதில் இடம் பிடித்துவிட்டால் முக்கால்வாசி கல்வி கிடைத்த மாதிரி .. இதையே குருகுல வாசம் என்பார்கள். சகலமும் கற்றிருந்தும், ஆதிசங்கரர் தனக்கென ஒரு குருவைத்தேடி நர்மதா தீரம் சென்றார். கீதாசாரியரான கிருஷ்ணபரமாத்மா சாந்தீப முனிவரிடத்திலே சீடனாகி வித்தைகள் கற்றார் ..

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு வணக்கத்தில் கிடைக்கின்ற பேறு! ..



குரு வணக்கத்தில் நியதிகளும் உண்டு. மூன்று தலைமுறைகளைச் சேர்த்து வணங்கவேண்டுமாம் ..
குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு என்று அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். குருவின் பரம்பரையை அறிந்துகொண்டு வழிபடும்போது அவர்களுடைய அனுக்ரகமும் சேர்த்து கிடைக்கிறது என்கிறது ஐதீகம்.


## சிவபெருமானே உலக குரு

வித்தைகள் எதற்கும் எல்லை. இல்லை. ஆனால், எந்த குருவுக்கும் ஒரு குரு உண்டு. ஜனகர் உள்ளிட்ட நால்வர் கொண்ட குருமார்களுக்கு இணையானவர்களைத் தேட முடியாது. வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள் உட்பட அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தவர்கள் இவர்கள். உலகின் ஈடில்லா பண்டிதர்கள்!
அப்படியானவர்களுக்கே சந்தேகம் வந்திருக்கிறது! அவர்களுக்கும் குரு தேவைப்பட்டார். அவரே சிவகுருவாகிய சிவபெருமான். இப்போதும் அவரே நம் உலகத்திற்கே குரு. கற்றோர் ஐயங்களையும் அவரே தீர்ப்பவர். பிரபஞ்ச பரமாத்ம குரு.

## ஆனி மாத ஆனந்தம்!

## ஐயாயிரம் ஆண்டுகள் ..

கிருஷ்ண பரமாத்மாவின் திரு அவதாரம் இரண்டு நோக்கங்களை இப் பூமியிலே கொண்டதாக இருந்தது. துஷ்டநிக்ர, சிஷ்டபரிபாலனம் செய்வது ஒன்று. கலியுக மக்களுக்குப் பயன்படத்தக்க கீதையை தருதல் மற்றொன்று. அர்ச்சுனனுடைய கலக்க நிலையை எதிர்பார்த்து, அந்த தருணத்தை கீதைக்கான அறிமுகத்திற்குப் பயன்படுத்தினார் பகவான். இந்த யுகத்திலே வாழும் அனைவருக்குமான கீதை அருச்சுனன் மூலமாக வழங்கப்பட்டது. ''நான் ரிஷிகளிலே வியாச மகரிஷியாக இருக்கிறேன் ..'' என்பது கண்ணன் கீதையில் கூறிய செய்தி. ஆகவே, வியாச பகவானுக்குச் செய்யும் பூஜை கண்ணனுக்கே போய்ச் சேர்கிறது.




## நான்கு மாதங்களுக்கு பகவானின் ஆழ்ந்த யோக நித்திரை ..

## வேதத்தை நான்காக வகுத்த வியாசர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு பூர்ணிமை
தமிழகத்தில்
காமகோடி மடத்தில்
மிக முக்கியமானதாக
கருதப்படுகிறது. இந்த
பூஜைக்கென்றே தனி
மண்டபம் அங்கே
நிர்மாணிக்கப்பட்டு,
அதில் அட்சதை
பரப்பிய பீடத்தில்
கிருஷ்ண விக்கிரகம்
பிரதிஷ்டை
செய்திருக்கிறார்கள்.
சுற்றிலும்
தேவர்களையும்,
ரிஷிகளையும் குரு
பரம்பரையிலே வந்த
ஆசாரியர்களையும்
வைத்திருக்கிறார்கள்.
ருத்திராட்சங்களிலும், எலுமிச்சம்
பழங்களிலும் ஆவாஹனம் செய்து,
அவர்கள் யாவருக்கும் தனித்தனியே
பூஜைகள் நடத்துகிறார்கள்.



அறிய வேண்டிய மகரிஷி
வியாசர் ..

வியாசரை நோக்கி குருபூர்ணிமையில்
முக்கியமான பூஜைகள்
நடத்தப்படுகின்றன. துவாபர யுகத்தின்
முடிவிலே, அதாவது கலியுகத்தின்
ஆரம்பத்தில்
ஐயாயிரம் ஆண்டுகளுக்கு
முன் வியாச மகரிஷி வேதத்தை
நான்காக
வகுத்தார்.
உத்தர மீமாம்சை, பதினென்
புராணங்கள், பாரதம் முதலியவையை
யாத்தவரும் இவரே.
இதுபோலவே, 1180 பிரிவாக
அவர் வேதங்களை வகுத்தார்.
வேதம் முழுவதையும் அத்யயனம்
செய்வதென்பது முடியாத காரியம்.
ஒரு
மனிதன் எவ்வளவு பாகத்தை
அத்யயனம் செய்து, சிரயேஸ்ஸை
செய்துகொள்ள முடியுமோ
அவ்வளவையும்
ஒரு பிரிவாக வகுத்து வைத்தார்.

வேதங்களை யாத்தும், பிரித்தும்
உலகுக்கு தந்தவர்!! ..



**வேதங்களை முழுமையாக அறிவதென்பது முடியாது.**

**அதனால் நான்காக வகுத்து, 1180 பிரிவாக்கி மனித குலத்திற்கு தந்தார் வியாச மகரிஷி.**

**1180 பிரிவுகளில் இப்போது எட்டு மட்டுமே இருப்பதாக அறிய முடிகிறது ..**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதனை

## என்ற இந்த அரக்கி யார்?



அழகே உருவாக அமர்ந்து, இந்த குழந்தைக்கு அன்போடு பாலூட்டுபவள் தாய் அல்ல. இவள் ஒரு அரக்கி. மடியில் கிடக்கும் குழந்தை கிருஷ்ணர். இவள் ஊட்டுவதும் விஷப்பால். கண்ணனைக் கொல்வதற்காக பல முயற்சிகள் எடுத்தும் பலிக்காமல் போனதால் இப்போது கம்சனால் இந்த அரக்கி அனுப்பப்பட்டாள். இதிலும் கம்சன் தோல்வியை அடைந்தான். பாலருந்துவதுபோல அவளின் உயிரை உறிஞ்சி கிருஷ்ணர் இவளைக் கொன்றார்.

---

# மச்ச வல்லபன் !

இராமயண காவியத்தின் மிக அற்புதமான வீரன் இந்த மச்ச வல்லபன்! ஆனால் இந்த வானரவீரன் ஒரு தேன்துளி போல ஒரேஒரு சம்பவத்தில்தான் வருகிறான்.

யுத்த காண்டத்தில் ஒரு உக்கிரமான மோதலில் இவன் அறிமுகமாகிறான். அதுவும் அந்த மோதல் இடம் பெறுவதோ வாயு புததிரன் அனுமனோடு! ..

இதைவிட ஆச்சரியம் -- இந்த வீரன் வேறு யாருமல்ல! நம் ஆஞ்சநேயரின் புதல்வனே இவன்! அதிர்ச்சியான இந்த தகவலுக்கு பிரம்மச்சாரியான அனுமன் பொறுப்பல்ல. அவர் கடலைக்கடந்த உக்கிர தருணத்தில் சிந்திய வியர்வைத் துளியில் உதித்தவன் இவன். இது அனுமனுக்கும் தெரியாது.

விதி வசமாக இவன் எதிரியான இராவணனின் அணிகளில் ஒன்றில் பணி புரிந்தான். முக்கியமான ஒரு சந்தர்ப்பத்தில் அனுமனும், மச்சவல்லபனும் நேருக்கு நேர் மோதினார்கள். அற்புதமான அந்த சாகஸ நிகழ்வின் விபரம் கடந்த வருட ஆடிமாத 'பக்தி விஜய' த்தில் வந்தபோது வாசகர்கள் மகிழ்ந்து பாராட்டினார்கள் ..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றனர் ..



அருட்பணி
தமிழ் நேசன்
அடிகள்

பதிப்பாசிரியர்
'மன்னா ..'

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், மன்னார் மாவட்ட கத்தோலிக்க மாத இதழாகிய 'மன்னா ..' பத்திரிகையின் ஆசிரியரும், மிகச்சிறந்த மனிதநேயச் சிந்தனையாளருமாகிய அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தனது 2012 செப்டம்பர் மாத இதழில் பக்தி விஜயம் சஞ்சிகையை இவ்வாறு அகமகிழ்ந்து பாராட்டினார் ..


"பக்தி விஜயம் சஞ்சிகை மன்னாரில் இருந்து இந்துசமய ஆன்மீக நூலாக மாதாந்தம் வெளிவருகிறது. உருவத்திலும், உள்ளடக்கத்திலும் சிறப்பாக வடிவமைக்கப்படுகிறது. தமிழக வெளியீடுகளுக்கு எந்த வகையிலும் குறையாத அளவுக்கு தரமுள்ள இதழாக இது வந்து கொண்டிருக்கிறது.

இந்து சமயத்தின் அற்புதமான புராணங்களையும், ஆன்மீகச் செல்வங்களையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் இச் சஞ்சிகை சுவைபடத் தருகிறது. குடும்பத்தோடு வாசித்து பக்தி மயமான நடைமுறைகளைப் பின்பற்றவும், சமய இன்பம் பெறவும் இது துணைநிற்கிறது.

இதன் ஆசிரியர் குறிப்பிடுகையில் -- '.. வாசிப்பிலும், சமயப்பற்றிலும் நம் தற்கால சந்ததியினர் குருகிய அறிவோடு இருப்பதைக் காண்கிறோம். எதிர்காலத்தில் இந்த இரண்டு அற்புதத் துறைகளையும் மென்மேலும் புறக்கணிப்பார்களோ என்ற கவலையும் எழுகிறது. எல்லாவற்றையும் இழந்ததுபோல ஆன்ம பலமும், வாசிப்பு ஞானமும்கூட நமக்கு உரிமையற்றுப்போக விடலாகாது. இந்திய படைப்புகளிலும், வெளியீடுகளிலும் கிடைக்கின்ற வாசிப்பு சுகத்தை நாமும் அனுபவிக்க இன்னும் எத்தனை காலம் காத்திருப்பது! எம்மாலும் அப்படித் தரவும், பெறவும் முடியாதா? .." என்ற ஆழ்ந்த கருத்தை வெளிப்படுத்துகிறார் ..

இந்த அரிய முயற்சி வளர வேண்டும், வாசிப்புத் துறை சிறக்க வேண்டும், ஆன்மீக ஞானம் பெற மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று அன்போடு வாழ்த்துகிறேன் .. "

## வாழ்த்துகின்றனர் ..



" 'பக்தி விஜயம் ..' ஆகிய இந்த சஞ்சிகை மன்னாரில் இருந்து வெளி வருகிறதென்று நினைக்கும்போது அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அதிலும், அது நாட்டின் எல்லா இடங்களுக்கும் சென்று சைவ மக்களை மகிழ வைக்கின்றது என்றெண்ணும்போது இன்னும் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. இப்படியொரு சஞ்சிகை தற்காலத்தில் உருவாகி, அதனை சைவ மக்கள் ஆர்வத்துடன் வாசித்து பயன்பெறுகிறார்கள் என்பது உண்மையிலேயே பெருமிதமானது. நேர்த்தியான வடிவமைப்பும், இதிகாச இலக்கியங்களும், நவீன வழிகளால் எடுத்துச்சொல்லும் பாங்கும் இந்திய வெளியீடுகளை மிஞ்சும் வண்ணம் இருக்கிறதென்றால் அது மிகையில்லை.

ஒரு வருட நிறைவை கடந்துள்ள இந்நேரத்தில் மேலும் பலவருட சேவையை இச்சஞ்சிகை தரவேண்டும் எனக்கேட்டு, அன்போடு வாழ்த்தி மகிழ்கிறேன் ..



**ஆ. ஐ. தயானந்தராஜா அவர்கள்,**
அதிபர்,
மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் காணகத்தின் உள்ளே! ..

## 01




இறைவனையும், தன்னையும் முழுமையாக அறிந்தவரே உண்மையான பக்திமான். ஆனால் அது அவ்வளவு எளிதன்று. அப்படியிருந்தும் நித்திய சமய விஷயங்களில் ஈடுபாடு காட்டுவதால் பக்தி நிலையில் வாழ்வதாக நினைத்துக் கொள்கிறார்கள். இதில் கிடைக்கும் திருப்தி மட்டுமே பலன். இதோடு நின்று விடுவதல்ல இந்து சமயமென்பதை அறிந்து பயன்பெற முயல்வதில் கிடைப்பதே பக்தி. கடின முயற்சியாக தோற்றமளிக்கும் இந்த 'வேலையை' இலகுவாக கையாளுபவர்கள் இருக்கிறார்களா? ஆம் .. அவர்களே சித்தர்கள்.

இறைவனை அறிய, அடைய சிறந்தவழி சித்தர் வழி என்பார்கள். இது முற்றிலும் சரியே. பின்பற்றுவதற்கு கடினம் என்பதால் இந்த வழியைத் தள்ளிவைத்துவிட்டு தமக்கேற்ற வழியில் பக்தியை செலுத்திக்கொண்டிருக்கறார்கள். அது கடினமானதா, அதை கொஞ்சமாவது இலகு படுத்திக்கொள்ள முடியாதா என்று ஆசைப்பட்டால் பலன் கிடைக்க வழியுண்டு. அதற்கு முதலில் சித்தர்களை அறிய வேண்டும்.

### சித்தர் என்பவர் யார்?

மனித குலத்தின் மிக உயர்ந்தவரே சித்தர். இறைவனையும், தன்னையும் அறிந்து இரண்டையும் இணைப்பதற்கு பெரும் ஞானவல்லமை வேண்டும். அதை அடைந்து சாதனை புரிந்தவரே சித்தர். சமயம் பெற்ற பேறால் ஒருவர் இருவரல்லாமல் பெருமளவில் சித்தர்கள் இருந்திருக்கிறார்கள் ..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் என்பவர் யார், அவர்களின் வழிதான் என்ன, அப்படி எத்தனைபேர் இருக்கிறார்கள் என்றெல்லாம் கேள்விகள் தோன்ற ஆரம்பித்தால், அதுவே ஆன்மீக வாழ்வுக்கு ஒரு திறவுகோல் கிடைத்தமாதிரிதான்.

சிவத்தை தன்னுள் கண்டு, அகதரிசனத்தை பூரணமாக அனுபவித்து, மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களை உணர்ந்து, அதை செய்து காட்டும் ஆற்றலை கொண்டிருப்பவர்கள் சித்த மூர்த்திகள். 'சித்தர் ' என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர் என்று பொருள்.

கிட்டத்தட்ட இறைவனின் அம்சமாவார். பல சந்தர்ப்பங்களில் இறைவனே பணியும் அளவுக்கு சித்தர்களின் ஞான சக்தி அதிபிரகாசம் கொண்டிருக்கும். சித்தர்களிடம் தெய்வம் ஏவல் புரியும் பல கதைகளை வாசிப்பு ஆர்வம் உள்ளவர்கள் அறிவார்கள்.

பல பிரசித்தி பெற்ற தலங்களில் மூல மூர்த்திகளின் பிரகாரங்களுக்கு அருகிலேயே சித்தர்களுக்கென்றும் சந்நதிகள் உள்ளன. சித்தர்கள் யோக சமாதி அடைந்த இடங்கள் இன்றும் திருத்தலங்களாக விளங்குகின்றன. அவ்விடங்களில் வழிபட்டு அதன் மகிமைகளை அனுபவிப்போர் பெருமளவில் உண்டு.

சித்தர்களின் சாதனைகள் பெரும் அற்புதங்களாக ஆன்மீக ஆய்வாளர்களால் உறுதிப் படுத்தப்பட்டிருக்கின்றன. கூடுவிட்டுக் கூடுபாய்தல், நாடி நரம்புகளை ஒடுக்குதல், மூச்சடக்குதல், உடம்பைத் துறந்து ஆத்ம சஞ்சாரம் புரிதல், தொலைதூர சம்பவங்களை ஞான திருஷ்டியால் அறிதல், அந்தரத்திலே மிதந்து இன்னோர் இடத்திற்கு செல்லுதல் போன்ற இவர்களின் காரியங்களை நம் உலகம் கண்டு வியந்திருக்கிறது.

இப்போதும் கூட மேலைத்தேய நாடுகளின் ஆன்மீக ஆராச்சி மையங்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டு வருகின்றன ..



இவர்களின் உலகாதாய இயல்புகளை அறிந்து அவற்றை சிறப்பாக வெளிப்படுத்திய விஞ்ஞான சக்திகளையே நாம் இன்று காண்கிறோம். ஆன்மீக, மருத்துவ, இலக்கிய, கணித, தத்துவ, இரசவாத ஆக்கங்களின் மூலாதார வேர்களாக சித்த ஞானமே விளங்குகிறது. சமூக வாழ்வின் சலசலப்புகளில் இருந்து பிரிந்து தம்மை தனிமையாக்கிககொண்டு அனேக கண்டு பிடிப்புகளை மனித வாழ்வுக்காகத் தந்திருக்கிறார்கள். ஒரு விஞ்ஞானி என்பவர் ஒரு கண்டு பிடிப்புக்காக பல ஆண்டுகள் தனிமைச் சிறைக்குள் வேலை செய்வதற்கு சித்தர்களே முன்னோடிகள்.

புலன்களின் மெய்யான அறிவு, உடலின் அதிசய இயக்கம், சிந்தனா சக்தியால் புவனத்தை கட்டுப்படுத்துதல் என்ற தன்னிலைச் சாதனைகளை சித்தர்களே உலகுக்குத் தந்தார்கள். பரபரப்பான உலக வாழ்விலே இயங்கும் தேவைகளை கானகத்திலே இருந்துகொண்டு சித்தர்களே வடிவமைத்துக் கொடுத்தார்கள். அவர்களின் சாதனைகளை 'சித்து விளையாட்டுக்கள்' என்று பக்தர்கள் செல்லமாகக் குறிப்பிடுவார்கள். ஆன்மீக விஷயங்களுக்கும் அப்பால் அறிவியலிலும்கூட சித்தர்களின் சித்தாந்தங்களே முதலிடம் வகிக்கின்றன.சித்தர்களை வரையறுப்பதோ, விமர்சிப்பதோ இயலாத காரியம். சாமானிய அவதானிப்புகளால் அவர்களை எடைபோட முடியாது. இன, மத, பிரதேச பேதங்களுக்கும் அப்பால் தமக்கென்று ஒரு உலகத்தை அமைத்துக்கொண்டு வாழ்பவர்கள். எச்ச சொச்சமாக அவர்களிடம் இன்னும் இருந்து வருகின்ற அபூர்வங்களையும், ஆற்றலையும் அறிவதற்கு இன்றைய மனிதன் ஏங்கித்தவிக்கிறான். காடுகளுக்குள்ளும், குகைகளுக்குள்ளும் சித்தர்களை தேடி அலைகிறான்.

**( சித்தர்கள் தொடர்ந்து வருவார்கள் ..)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாத ராசிப்பலன்கள்!

சோதிடர் எஸ். நாகலிங்கம்
சோதிட ஆராய்ச்சி நிலையம்,
மன்னார்
தொலைபேசி : 071 -- 3182858
023 -- 2250263

### மேஷம் : --

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்

3ம் வீட்டில் சூரியன் சஞ்சரிக்கவிருப்பதால், வெற்றிக்காக அதிகமாக உழைக்கவேண்டும். குருபகவானின் சஞ்சாரம் இந்த மாதத்தில் 3ம் வீட்டில் நடக்கிறது. அதனால் கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. கடன்கள் பெறுவது நல்லதல்ல.செலவுகளில் விழிப்போடு இருத்தல் நன்று. தொழிலில் இன்முகம் நன்மை தரும் பிள்ளையாரை துதிக்கவும்

### ரிஷபம் :

கிருத்திகை 2ம் பாதம் முதல், ரோஹிணி

தடங்கலுக்குட்பட்ட சுப காரியங்கள் வெற்றிபெறும். இதனால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். 2ம் வீட்டில் குருவின் சஞ்சாரம் குடும்ப ஒற்றுமைக்கு வழிகாட்டும். அதிக வெப்பம் காரணமாக உடல்நிலை பாதிப்படையும். ஜென்ம ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் ஆரோக்கிம் கெடலாம். கவனம் தேவை. எனினும், பிள்ளைகளால், நண்பர்களால், கொடுக்கல் வாங்கல்களால் மகிழ்ச்சி கிடைக்கும். ஈசனை வழிபட்டு வரவும்.

### மிதுனம் :

மிருகசீரிடம் 3ம் பாதம் முதல், திருவாதிரை,

இம்மாதத்தில் தடைகளும், தாமதங்களும் பாதிக்கலாம். அதிக மனக்குழப்பம் வரலாம்.12ல் செவ்வாய், சூரியனும் ஜென்ம ராசியில் குரு பகவானும் சஞ்சாரம் செய்வதால் ஆரோக்கியம் கெடும். வைத்தியச் செலவுகளை சந்திக்க நேரிடும். உத்தியோகம், தொழில் ஸ்தானங்களில் கருத்து மோதல்கள் ஏற்படும். அலைச்சல்களைக் குறைத்து, பயணங்களையும் தவிர்க்கவும். சிவபிரானை வேண்டி வழிபடவும்.

### கடகம் : --

புனர்பூசம் 4ம் பாதம் முதல், பூசம், ஆயில்யம்

அவதானமாக கையாள வேண்டிய மாதம இது. விரய ஸ்தானமான 12ம் வீட்டில் குருபகவான் சஞ்சரிப்பதால் பண விவகாரங்களில் அதிக கவனம் தேவை. சுபகாரியங்களிலும் சிக்கல் நிலைகள் தோன்றலாம். எனினும், ஜென்ம ராசிக்கு 11ல் சூரியனும், செவ்வாயும் சஞ்சாரம் செய்வதால் லாபத்திலும், உழைப்பிலும் முன்னேற்றம் இருக்கும். முதலீடுகளை தள்ளி வைப்பது நல்லது. தட்சணாமூர்த்தியை வழிபடவும்.



### சிம்மம் : --

மகம், புரம், உத்தரம் 1ம் பாதம்

சுபமான பலன்களால் இந்த மாதம் மகிழ்ச்சியாக கழியும். தடைப்பட்ட திருமணங்கள் நடந்தேறும். வீட்டில் விஷேசங்களால் களை கட்டும். பொருளாதாரம் ஓங்கும். சூரியனும், செவ்வாயும் 10ம் வீட்டிலும், லாப ஸ்தானமாகிய 11ம் வீட்டில் ருபகவானும் சஞ்சரிப்து விஷேட சந்தர்ப்பமாகும். தடைகள், க்டன்கள் பெருமளவில் குறையும். பொருள் சேரும். கணபதி வழிபர்டு நன்மை தரும்.



### கன்னி : --

உததரம் 2ம் பாதம் முதல், அத்தம் சித்திரை 2ம் பாதம்

சுமாரான பலன்களே அமைகிறது. தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும். வருமானங்கள் சம அளவிலேயே இருந்தாலும், 9ம் வீட்டில் சூரியனும், செவ்வாயும் சஞ்சரிப்பதால் அனுகூலங்களும் கிடைக்கின்றன. குடும்ப ஒற்றுமையும், உடல் நலமும் பாதிப்படையலாம். பயணங்களில் நன்மையுண்டு. பேசுவதில் கவனம், முதலீட்டில் முன்யோசனை ஆகியவை நன்று. ஆஞ்சநேயரை வணங்கி காரியமாற்றவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலாம் : --

**சித்திரை 3ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ம் பாதம்**

*பொருள் வரவு நன்றாக இருக்கும் இதனால் கடன் தொல்லை, பிரச்சினைகள் தீரும். தடங்களிலிருந்த சுபகாரியங்கள் இனிதே நிறைவேறும். பயன் மிக்க பிரயாணங்கள் இருக்கும். 8ல் சூரியன், செவ்வாய் சஞ்சாரம் இருப்பதால் வருமானங்கள் தடை இன்றி நடைபெறும். குரு பாக்கிய ஸ்தானமான 9ல் சஞ்சரிப்பதும் நன்மைக்கே. உடல்நலம் சம்பந்தமான செலவுகள் வரும். கந்த வழிபாடு துணை செய்யும்*

## விருச்சிகம் :

**விசாகம் 4ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை**

*இந்த மாதத்தில் சில .இடையூறுகளால் காரிய தாமதம் உண்டாகும். கவனமான நடவடிக்கைகள் நன்மை தரும். வெப்ப மேலீட்டால் நோய்களும், அதனால் செலவுகளும் இருக்கும். நம்பி இருந்த உதவிகள் தருணத்தில் கிடைக்காமல் இருக்கும். 8ல் குருவும், 12ல் சனியும் ராகுவும், 7ல் சூரியனும் செவ்வாயும் சஞ்சரிப்பதால் அவதானம் அதிகம் வேண்டும். சிவபெருமானின் அருளை வேண்டி வழிபடவும்*


## தனுசு : --

**மூலம், புராடம், உத்திராடம் 1ம் பாதம்.**

*பிள்ளைகளினால் இருந்து வந்த கவலைகள் நீங்கும். தடைப்பட்ட நற்காரியங்கள் ஈடேறும். குடும்பத்தில் கருத்து முரண்கள் மறைந்து அன்பு உருவாகும். 7ல் குருவும், ஜென்ம ராசியில் சூரியன் செவ்வாயும் உலவுவதால் சஞ்சலங்கள் குறையும். பொருள் வரவு நன்றாக இருக்கும். பங்குத் தொழிலில் லாபமும், நன்மையான பயணங்களும் அமையும். சனீஸ்வர வழிபாடு நல்லது*









## மகரம் : --

**உத்தராடம் 2ம்பாதம் முதல, திருவோணம், அவிட்டம் 2ம் பாதம்**

*அனுகூலம் குறைந்திருக்கும் மாதம் இதுவாம். அமைதியும், வரவுகளும் இருக்காது. கணவன் மனைவி அந்நியோன்யம் குறையும். 6ம் வீட்டில் குரு சஞ்சாரம் செய்வதே இந்த சாதகமற்ற நிலைமைக்கு காரணம். எனினும், மாத இறுதியில் சூரியன் 6ம் வீட்டிற்கு வருவதால் சற்று ஆறுதல் கிடைக்கும். நஷ்டங்களை சமாளிக்கும் அளவுக்கு வாய்ப்பு கிடைக்கும். எதிர்ப்புகளும் குறையும். தட்சணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது*

## கும்பம் : --

**அவிட்டம் 3ம் பாதம் முதல், சதயம், புரட்டாதி 3ம் பாதம்**

*வீட்டில் சந்தோஸம் ததும்பும் மாதம் இது. பிள்ளைகள் மகிழ்ச்சியை தருவார்கள். சுபகாரியங்களால் குடும்பம் மகிழ்ச்சியடையும். சிற்சில சிரமங்களும் இருக்கும். 4ம் வீட்டில் செவ்வாய், சூரியன் சஞ்சரிப்பதால் அலைச்சல்களும், சிரமங்களும் இருக்கும். இருப்பினும், குரு பகவான் 5ம் வீட்டில் சஞ்சரிப்பதால் நெருக்கடிகள் தளர்ந்து, பணவரவும் கிடைக்கும். கடன்கள், வழக்கு விவகாரங்கள் குறையும். சிவ வழிபாடு வேண்டும்*

## மீனம் : --


**பூரட்டாதி 4ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி**

*சுமாரான பலன்களை இம்மாதம் தருகிறது. குடும்ப அங்கத்தவர்களின் அனுசரனை தேவையாக இருக்கும். செலவும், வரவும் சம அளவிலேயே இருக்கும். செவ்வாயும், சூரியனும் ஜென்ம ராசிக்கு 3ல் சஞ்சரிப்பதால் பழைய நெருக்கடிகள் விலகும். குரு 4ல் உலவுவதால் பண வருவுகள் ஓரளவு இருக்கும். பூர்வீக சொத்துக்களால் பிரச்சினைகள் உண்டு. தொழில் ஸ்தாபனங்களில் வேலைப்பளு அதிகரிக்கும். விநாயகர் வழிபாட்டில் நன்மை கிடைக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வாழ்த்துகின்றனர் ..

காலத்துக்கு ஏற்ற நல்ல சேவை இது. ஏனென்றால் இப்போது சமயத்திலோ, அதன் ஆழ்ந்த அர்த்தங்களிலோ அதிக அக்கறை வேண்டியதில்லை என்ற நிலையில் வாழும் இன்னோர் சமூகத்தைப் பார்க்கிறோம். சைவத்தின் உன்னத நிலைகளை இந்த நவீன வேளைக்கு ஏற்றவாறு ஊட்டுவதென்றால் அது மிகக் கடினமானதொரு வேலை. அதனை இந்த 'பக்தி விஜயம் ..' சாதித்துக் காட்டுவதைக் காண்கிறேன். வியக்கிறேன், மிக மகிழ்கிறேன்.

படித்தவர்கள், அறிஞர்கள், புலமை மிக்கவர்களே அனுபவித்து வந்த புராண, சமய அமிர்தங்களை இப்போது படிக்காதவர்களுக்கும், பாமரர்களுக்கும்கூட இந்த சஞ்சிகை வழங்கி வருகின்றது. காட்சிகளும், ஓவியங்களும், எளிமையான நடையும் மிக அருமையாக ஆன்மீக கருத்துகளை விளக்குவதால் எந்த சிரமமும் இல்லாமல் சாதாரண மக்களும் புரிந்து, சமயத்தின்பால் இன்பம் கொள்கிறார்கள். இப்படி எல்லோராலும் உணர்வது, முயல்வது, வெற்றி பெறுவதென்பது சந்தேகமே.


அந்த வகையில் ஆசிரியரின் காலத்திற்கேற்ற சிந்தனையும், அதை செயல்படுத்தும் நவீன நுட்பமும்,உழைப்பும் இணையில்லாத பாராட்டுக்குறியது.

மாதந்தோறும் இந்த சஞ்சிகை கையில் கிடைக்கும்போது அந்த மாதத்திற்குள் இத்தனை சிறப்புகள் மறைந்திருக்கின்றனவா என வாசிப்பவர்கள் அதிசயிப்பர். மாதங்களின் தன்மையோடு நிற்காமல் அதையொட்டிய புராணம், உபகதைகள் என்று அருமையாக விளக்கங்கள் கூறப்படுகின்றன. அதனிலும் அற்புதமாக காட்சிகளும், சித்திரங்களும் தத்ரூபமாக தரப்படுகின்றன.

சமயம் என்பது ஒரு வாழ்க்கை. அந்த வாழ்கையில் நமக்கு என்னென்ன வேண்டுமோ அத்தனையும் இந்த சஞ்சிகையில் இடம் பெறுகின்றது. நிறைய விஷயங்கள் சொல்லப்படுகின்றன. உண்மையிலேயே பிரமிக்கிறேன்.

பழமையான, தொன்மைமிகு காவியங்களையும், புராணங்களையும் மிக நவீன பாணியில் தருவதால் பார்த்தவுடனேயே கையில் எடுத்து வாசிக்க வைக்கிறது. இது ஒன்றே பெரும் வெற்றி. நம் நாட்டில் இப்படியொரு சஞ்சகை, அதுவும் ஆன்மீக தெளிவை தரக்கூடியதாக வருகிறது என்பது மட்டில்லா மகிழ்ச்சி தருவதாகும். இதன் வருட நிறைவு பெருமை மிக்கது. மனங்குளிர்ந்து வாழ்த்துகிறேன்.

கலாபூஷணம், சைவப்புலவர்
**சு. செல்லத்துரை** அவர்கள்
கொழும்பு




## கைகொடுத்த வந்தனைக்குரியவர்கள் : --

தர்மகுமார குருக்கள், கம்பவாரிதி, நாகலிங்கம், கைலாசநாதன், நிகேதன், வாசுதேவ குருக்கள், காந்தன் குருக்கள், ஸ்ரீதரன் குருக்கள், ரவிச்சந்திர குருக்கள், பாபு குருக்கள், சோமதேவ குருக்கள், ஸ்ரீவிக்னேஸ்வரன், றமேஸ், புலவர் திருநாவுக்கரசு, மாலதி முகுந்தன், சுதர்ஷனராஜ குருக்கள், சிவராஜ சர்மா, ரமணி குருக்கள், ரகுபதி பாலஸ்ரீதரன், ராஜேந்திரம், சந்திரிகா, ராம், பாபு சர்மா, ஜெயரட்ணம்,

கனகசபை, பத்மநேசன், ஜீவானந்தம், விக்னராஜா, மனோகரன், உலகநாதன், சிறீஸ்கந்த மூர்த்தி, சிவரட்ணம், கணேசமூர்த்தி, குகபாஸ்கரன், திருமதி. வன்னியசிங்கம், சந்திரகாந்தன், லோகநாதன், சிவபாலன், மாணிக்கவாசகர், ராசநாயகம், சிவராஜா, தில்லைநடராஜா, வரதராஜா, காந்தரூபன், சுகந்தி, ராஜரட்ணம், ராஜகுலேந்திரா, வித்தியாதர குருக்கள், செல்வராசா, நடேசானந்தன், சூரியகுமார், செல்வரட்ணம், யோகநாதன், நந்தகோபி, சுதர்ஷன், குலசேகரம், குமார், பாலசுப்பிரமணியம், ஜெயசுத குருக்கள், சத்தியோஜாத குருக்கள், சொக்கன், பாஸ்கரன், சிவா, ரதினி, கல்யாணி, தேவராணி, ஜெயந்தி, தயாபரன், பகீரதன், கமலாம்பிகை, புனிதகுமாரி, கிரிஷ்டியன், சிவானந்தன், சிவகரன், இலங்கேஸ்வரன், சிகாமணி, மதன், இராமச்சந்திர குருக்கள்,

திருமதி. அருள்குமார், வாஹினி, ஆறுமுகதாஸன், குட்டித்தம்பி ஈஸ்வரி, விஜயகுமார், திருமதி. சிறிசேன, கபாலீஸ்வரன், றோகன்ராஜ், செந்தூரன் ...

என்று இன்னும் இருக்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது ஸ்ரீசுவாமி நாராயணன் ஆலயம்! இந்து மரபில் ஐரோப்பாவில் முதன்முதலாக அமைந்த ஆலயம் ..

லண்டனில் இருக்கின்ற இது அற்புதமான கட்டுமானம் கொண்ட ஆலயமாக திகழ்கிறது. எந்த உலோகங்களும் பயன் படுத்தாமல், பழைமையான சிற்பசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது இதன் வடிவமைப்பு சிற்பப்பகுதிகளை தொகுப்பதற்கே மூன்று ஆண்டுகள் கழிந்தனவாம்! இவ்வாலயத்தின் கீழே 'இந்து சமயத்தின் அர்த்தங்கள்' எனும் கண்காட்சி மண்டபமும் உள்ளது. பெருமை பெற்ற இந்து சமயத்தின் பல தகவல்களை ஆச்சரிமூட்டும் வண்ணம் இங்கே விளக்கமாக அமைத்திருக்கிறார்கள்.

உலகத்திற்குக் கிடைத்த பெரும் செல்வம் வேதங்கள் இலக்கியம், பொருளாதாரம், தேவலோக தத்துவம், தூய்மை போன்ற எல்லா ஐதீக விளக்கமும் இங்கு உண்டு.

ஸ்ரீ சுவாமி நாராயணன் மூலமூர்த்தியாக விளங்குகிறார். கூடவே தெய்வ சன்னதிகளும், பிரகாரங்களும் பக்தி மயமாக காட்சி தருகின்றன. ஆலயத்தின் வெளித் தோற்றத்தைப் போலவே உட்பிரகாரங்களும் பக்தர்கள் உள்ளத்தை கொள்ளை கொள்கின்றன ..

**செதுக்கு முறையான சித்திர வேலைப்பாடுகள் கோயிலின் கட்டடம் முழுவதும் நிறைந்து வழிகின்றன. 2828 தொன் நிறையுள்ள சுண்ணாம்புக் கற்கள் பல்கேரியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு,. அதோடு 2000 தொன் நிறையுள்ள இத்தாலிய கரார பளிங்குக் கற்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு, கலை வேலைப்பாடுகள் செய்யப்பட்டன.**

**1500 சிற்பிகளினால் செதுக்கப்பட்டு, மீண்டும் லண்டன் மாநகருக்குக் கொண்டுவரப்பட்டன.**

**26,300 சிற்பச் செதுக்குகளைக்கொண்ட இக்கோயில் பார்ப்பவர்களை திகைக்க வைக்கிறது. அவ்வளவு நுட்பமாக ஒவ்வொரு செதுக்கல்களும் தொகுக்கப்பட்டிருக்கின்றன!**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டில் விரத பூஜைகள்

## வளங்களை அள்ளித்தரும் வரலட்சுமி விரதம்







### வரலட்சுமி விரதம்!

**16 08 2013 வெள்ளிக்கிழமை**

இந்த விரதத்தை முதலில் அனுட்டித்த உத்தமியின் பெயர் சாருமதி.

மகத நாட்டில் வாழ்ந்த இந்த நங்கை தனது கணவனையும், அவனது பெற்றோரையும் தெய்வமாக கருதி பணிவிடை செய்தாள். கற்புநெறியும், சேவையும் கருத்தாக திகழ்ந்த இவளிடத்தில் மகாலட்சுமி தேவிக்கு அளவற்ற பிரியம்.

ஒருநாள் சாருமதியின் கனவிலே தோன்றிய அன்னை ''மகளே, நீ வரலட்சுமி விரதத்தை நோற்பாயாக ..'' என்று திருவாய் மலர்ந்தார். அதனை கடைப்பிடிக்கவேண்டிய முறையையும் சாருமதிக்கு தேவி எடுத்துரைத்தார்.

சாருமதியும் அந்த விரதத்தைக் கடைப்பிடித்து எல்லா வகையான செல்வங்களையும் அடைந்தாள்.

அதுமட்டுமல்ல -- உத்தம குணம் கொண்ட சாருமதி அவ்விரதத்தை எல்லோருக்கும் சொல்லித்தந்து, அவர்களும் பெரும் பலனடைய உதவினாள் ..

பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும்கூட இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். மாமன்னன் விக்கிரமாதித்தன், நாயன்மார்களில் ஒருவரான நந்தனார் போன்றவர்களெல்லாம் இந்த விரதத்தை நோற்று பயன்பெற்றவர்களே. சிரவண மாதத்திலே வரும் பௌர்ணமிக்கு முந்தியதாக வருகின்ற வெள்ளிக்கிழமையிலே நோற்கும் விரதம் இதுவாகும். சில வருஷங்களில் ஆடி மாதமும், ஆவணி மாதமும் கல்ந்தும் இந்த நாள் வரும். இந்த வருஷத்தில் 16 - 08 - 2013 திகதியில், வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூஜை ஆலயங்களில் நடத்தப்படுவதைக் காணலாம்.

இந்த விரதத்தை வரலட்சுமி விரதம் என்று பெயரிட்டாலும், கூடவே உடல் நலம், மாங்கல்ய பலம், சந்தானம், ஆயுள்விருத்தி, செல்வம் யாவற்றையும் தரவல்லது.

இந்த விரதம் ஏற்று புகழ் பெற்ற தேவர்கள், மன்னர்கள், மங்கையர்களின் கதைகள் நிறைய உண்டு. அற்புதமான புராண சம்பவங்களை உள்ளடக்கிவை அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாருமதியின் மூலமாக தரப்பட்ட வரலட்சுமி விரத முறைகள் வருமாறு ..

முதல் நாளன்றே வீட்டைக்கழுவுதல், சாணமிட்டு மெழுகுதல், கோலம் இடல் யாவற்றையும் நிறைவேற்ற வேண்டும். வீட்டின் கூடத்தில் சுவற்றின் ஓரமாக தகுந்த இடத்தை தூய்மையாக்கி, சுத்தமான பலகை ஒன்றை வைத்து, அதன்மீதும் ஒரு கோலத்தை இடவேண்டும்.

சுத்தமான செம்பு ஒன்றின்மேல் மஞ்சள் தடவி, அதனுள் கால்பகுதியை அரிசியும், பருப்பும் கலந்து நிரப்ப வேண்டும். சிறியதான சீப்பு, கருகமணி வளையல், சிறிய கண்ணாடி, மஞ்சள், தேசிப்பழம், குங்குமம் நிறைத்த குங்குமச்சிமிழ், சில நாணயங்கள், (வெள்ளி தங்கங்களில் நாணயம் இருந்தால் அதையும் ) வெற்றிலை, பாக்கு இவற்றையும் செம்பினுள் போடவேண்டும்.

செம்பின்மீது மாவிலை கட்டி, மஞ்சள் பூசிய தேங்காயை வைக்கவும். தேங்காயின்மீது குங்குமப் பொட்டிட்டு, அதை ஒரு கலசம்போல் பாவித்து, மஞ்சள் சரடு ஒன்றைக் கட்டவேண்டும். கைவசம் பூஜையறையில் அம்மனின் முகம் இருந்தால் அதை தேங்காயில் பதிக்கலாம். பின்பு கருகமணி பொட்டுமாலையை கலசத்தில் சாத்தவேண்டும்.

வெண்பட்டு ஒன்றை கலசத்தில் சாத்த வேண்டும். வசதியில்லையேல் சாதாரண சட்டைத்துணியே போதும். பூமாலை இட்டு தாழம்பூவால் அலங்கரிப்பதும் வழக்கம். இந்த கலசத்திலே மகாலட்சுமியை ஆவாஹனம் செய்து, தேவி அதில் எழுந்திருப்பதாக பிரதிஷ்டை செய்யவேண்டும். இதுவே ஐதீகம்.

கலசத்தின் முன்னே விளக்கேற்றி, கற்பூர ஆரத்தி காட்டி, வெண்பொங்கல் படைக்க வேண்டும். முதல்நாள் ஆயத்த நிகழ்வாக இவற்றை செய்து வைத்து, மறுநாள் அதிகாலையிலே கண்விழித்தெழ வேண்டும். மஞ்சள் பூசி நீராடி, மங்களகரமாக குங்குமம் இட்டுக்கொள்ள வேண்டும்.

சுவாமி அறையில் மத்தியில் சிறிதாக மண்டபம் போல அமைக்கவும். ஒரு ஸ்டூல் வைத்து அதன் கால்களில் மலர்சுற்றி, மேலே கோலமும் இடவேண்டும்.. மேலே தலைவாழை இலை வைத்து அரிசி, அல்லது நெல்லைப் பரப்பவேண்டும். நல்ல நேரத்தை அவதானித்து இரண்டு சுமங்கலிகள் கூடத்தில் இருக்கின்ற அம்மன் கலசத்தை பலகையோடு தூக்கி வந்து அரிசி பரப்பி வைத்துள்ள இலைமீது வைக்கவும். அம்மனின் முகம் கிழக்கே பார்த்தவாறு இருக்கவேண்டும். புதிய பூமாலை சாற்றி, விளக்கேற்றி வணங்க வேண்டும்.



அம்மன் கலசத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணமாக வழிபடவும். மெல்லிய நூலில் நோன்புச்சரடு தயாரித்து, மஞ்சள் தடவவும். ஒன்பது முடிச்சுகள் இட்டு, நடுவில் ஒரு பூவையும் முடிய வேண்டும். நோன்புச்சரடுகளை கலசத்தில் வைத்து

''எங்களின் வீட்டிற்கு வந்திருக்கும் மகாலட்சுமியே, என்றைக்கும் நீங்காமல் இருந்து வரம் தரவேண்டும் ..'' என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.

வீட்டில் இருப்பவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற நூல்கள் தயாரித்து பூஜை முடிந்ததும்,நிறைவாக அத்தனைபேரும் கட்டிக்கொள்ள வேண்டும்.

இனிப்பு, கொழுக்கட்டை போன்ற நைவேத்தியங்களை படைத்து, அம்மனை வேண்டி நோன்புச்சரடு அணிந்து விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். அதன் பின்னரே உணவருந்த வேண்டும். வயதானவர்கள், நோயாளிகள் கொஞ்சம் பால் அல்லது பழம் இடையிலே சாப்பிடலாம். சுமங்கலிப் பெண்களை அழைத்து அவர்களுக்கு மங்கலப்பொருட்கள், அம்மனின் பிரசாதம் தரலாம்.

விரத நாளின் மாலையோ,மறுநாளோ அம்மனுக்கு ஆரத்தி காட்டி, கலசத்தை எடுக்கலாம். கீழே பரப்பியிருந்த அரிசியை, அல்லது நெல்லை ஒரு துணியில் முடிந்து அரிசிப் பாத்திரத்தில் வைக்க வேண்டும். இதனால் அன்னபூரணியின் கடாட்சம் வீட்டில் நிறையும். கலசத்தில் வைத்த தேங்காயை வைத்திருந்து அடுத்த வெள்ளிக்கிழமையில் பாயாசம் செய்து சுவாமிக்கு படைத்து, வீட்டாரும் உண்ணவேண்டும்.

வசதிக்கேற்றவாறு எளிமையாகவும் இந்த பூஜையை செய்யலாம். மனசுத்தியும், வழிபாடும் தேவியின் கவனத்தை ஈர்க்காமல் போகாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூஜைகளில்

# நித்ய பூஜை






பூஜைகளில் பலவகை உண்டு.

அதில் நித்தியபூஜை என்பது நமக்குக்கிடைத்த நாளாந்த கடமையாகும். இதனை பாக்கிய பூஜை என்றும், அந்தர பூஜை என்றும் வகைப்படுத்துவார்கள். நித்திய பூஜை என்பது நாம் நினைக்கின்ற தெய்வத்தை எண்ணிச் செய்யும் கிரியா பேதமாகும்.

இதனை சமய நூல்களில் கோட்பாடுகளுக்கு அமைய கூறியிருக்கிறார்கள். இதயத்திலிருக்கும் தியான மூர்த்ததை வெளியே கொண்டுவந்து இப்பூஜை நடத்தப்பட வேண்டும். சத்வ, ரஜஸ், தாமச தேவ பேதத்தால் வாழ்க்கை வேறுபட்டு நிற்பவை ஆகையால் அதன் பலன்களும் வேறுபட்டு நிற்கும் என சாஸ்திரங்கள் சொல்கின்றன.

சாங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என மூன்று விதமாக நித்திய பூஜை செயல்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.



## சாங்கம்

*அபிஷேகம், பாத்யம், ஆசமணியம், அர்க்கியம், ஆடை, அணிகலன், சந்தனம், மலர் இவற்றால் வழிபாடு செய்வது சாங்கம் எனப்படுகிறது.*

## உபாங்கம்

*தூபம், தீபம், திருநீறு அணிதல், -- விசிறி, குடை, கண்ணாடி, சாமரம், வாத்தியம், நாட்டியம், ஜபம் கொண்டு வழிபாடு செய்வது உபாங்கம் என்று அழைக்கப்படுகிறது*



## பிரத்யங்கம்


*வேள்வி நடத்துதல், பலியிடுதல், நிவேதனம் செய்தல், நித்திய உற்சவம், வாழ்த்து வழங்கல், தானங்கள் தருதல் ஆகியன செலுத்தி வழிபடுவது பிரத்யங்கம் என பெயர் கொள்கிறது*

*இப்படியான இருபத்தி நான்கு உபசாரங்களையும் இறைவனுக்குத் தந்து பூஜிப்பதை 'சாங்கோ பாங்க பிரத்தியங்க பூஜை' என அழைப்பார்கள்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சஞ்சீவிகள்!



## சித்த வைத்தியங்கள்



மாம்பழத்தில் உயிர்ச்சத்து ஆகிய 'ஏ' அடங்கியிருப்பதால், கண்பார்வைக்கு நிறைய சக்தி கிடைக்கிறது. இரத்த அழுத்த வியாதியை கட்டுப்படுத்துகிறது. சிறுவர்களுக்கு சுறுசுறுப்பை ஊட்டவல்லது ..

தினமும் இரவில் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் தொற்று நோய் ஏற்படாது என்கிறது சித்த வைத்தியக்குறிப்பு ..

பீர்க்கங்காய் வேரினை கஷாயம் வைத்து அருந்தி வந்தால் இரத்தசோகை நீங்குகிறது.


சிறுவர்களுக்கு கொய்யாப்பழம் சாப்பிடக்கொடுப்பதை சித்த மருத்துவம் வலியுறுத்துகிறது. வயிற்று உபாதைகளை ஆற்றி, எலும்பில் பலமும், உடலில் வளர்ச்சியும் தருகிறது ..

வெட்டுக்காயங்கள் ஏற்பட்டால் நாயுருவி இலையுடன், மஞ்சள் கலந்து அரைத்து காயத்தில் பூசினால் காயம் விரைவில் ஆறுகிறது ..

கர்ப்பமாக இருக்கும் மங்கையர்கள் குங்குமப்பூ, ரோஜா இதழ், ஏலக்காய் மூன்றையும் தேன் மற்றும் அப்பில் பழத்தோடு கலந்து தொடர்ந்து ஒரு மாதம் உண்டு வந்தால் சுகப்பிரசவம் ஏற்படும் ..

உடலில் அரிப்பு வந்தால் வன்னி மரத்தின் இலையை பசுப்பாலில் அரைத்து, தினமும் ஒரு அவுன்ஸ் அருந்திவர அரிப்பு குணமடையும் ..

சீரகத்தை வறுத்து தூள் செய்து மோரில் கலந்து குடித்தால் வயிற்றுவலி உடனே நிற்கும் ..








பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் யோகா

தொடர் 12



ஆரோக்கிய வாழ்வு



## 24 -- நின்ற பாதாசனம்

### செய்யும் முறை : --

ஒரு காலில் நின்றுகொண்டு மற்ற காலை மடித்து ஆசனவாயில் படும்படி வைக்கவேண்டும். கைகளை ஒன்றோடு ஒன்று இணைத்து தலைக்கு மேலே உயர்த்தி கும்பிட்ட நிலையில் நிற்கவேண்டும். இதே போன்று மற்ற காலையும் மாற்றிச் செய்ய வேண்டும். தேவையெனில் கொஞ்சம் மாற்றியும் இதனைச் செய்யலாம். காலை தொடையின் மேல் பத்மாசனம் போட வைப்பது போல வைத்து நிற்க வேண்டும். இதையும் இரண்டு கால்களிலும் மாறி மாறிச்செய்ய வேண்டும்.

### இதன் பலன்கள் : --

முதுகுத் தண்டு பலம் பெறும். இளமை மேலிடும். சிரசாசனத்திற்கும், அர்த்தசிரசாசனத்திற்கும் மாற்று ஆசனமாகவும் இது பலன் தருகிறது. மன ஒருமைப்பாட்டுக்கு ஒரு சிறந்த ஆசனம் இது. வாதம், மனச்சஞ்சலம், சோம்பேறித்தனம் ஆகியன நீங்கும். மகா பாரதத்தில் அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்கு இந்த ஆசனத்திலிருந்துதான் சிவபெருமானை நோக்கி தவம் செய்தான்.

## 25 -- பிறையாசனம்

### செய்யும் மூறை : --

இந்த ஆசனத்தை செய்வதற்கு முன் சூரியநமஸ்காரத்தின் இரண்டாவது நிலையை செய்வதற்கு பயிற்சி பெற்றிருந்தால், இப்போது இலகுவாக செய்ய முடியும். படத்தில் இருப்பதைப்போல செய்வதற்கு முடியாது என்று நீங்களாகவே ஒதுங்க வேண்டாம். தினமும் இதனை முயற்சி செய்தால் நிச்சயமாக கைவரும்.

### இதன் பயன்கள் : --

முதுகு தண்டு பலம் பெறும். இளமை மேலிடும். உடலில் உள்ள அத்தனை நரம்புகளும் தூண்டப்பட்டு புத்துணர்ச்சி பெருகும். சோம்பல் ஒழிந்து சுறுசுறுப்பு உண்டாகும். நெஞ்சுக்கூடு விரியும். நுரையீரல், சுவாச உறுப்புகள் விரிந்து பலமடையும் ..


நன்றி :
அஷ்டாங்க யோகி
நா. குலசிங்கம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலங்களை நாடி ..

# நம்மூர் புண்ணிய தலங்கள் ..



இலங்கையின் வட கரைக்குக் கிடைத்த அதிவிஷேச தீர்த்தம் இது .. புராண சிவத்தலத்தைக்கொண்டு புண்ணியம் தருகின்ற இதன் புராதன நாமம் திருத்தம்பலை. இங்கு கோயில் கொண்ருக்கின்ற இறைவனின் புராதன நாமம் திருத்தம்பலேஸ்வரர்.

பார்த்தாலே புண்ணியத்தை அள்ளித்தருகின்ற இந்த தீர்த்ததிலே கீரி முகமுடைய முனிவர் ஒருவர் நீராடி, அருகிலுள்ள பெருமானை வழிபட்டு வந்ததாலேயே கீரி முகம் நீங்கப்பெற்றார். இதனால் கீரிமலை என்ற பெயர் கொண்டு இது அழைக்கப்படுகின்றது. இப்பெயர் வடமொழியில் நகுலகிரி என்றானதால், இங்கு தலமமைத்து அருள்பாலிக்கின்ற பெருமான் நகுலேஸ்வரர் ஆனார். அன்னையும் நகுலாம்பிகை -- நகுலேஸ்வரி என்று திருநாமம் சூட்டப்பட்டு தலமும் நகுலேஸ்வரம் ஆனது.




தீர்த்தமும், தலமும் ஒருங்கே நாடி யாத்திரை புரிவோருக்கு ஏற்ற சிறப்பான தலங்களில் ஒன்று இது. அருச்சுனன், நளன், முகுந்தன் வழிபட்ட இத்திருபூமி நெடுந்தூரம் கற்பாறைகளைக்கொண்ட கடல் பகுதியாகும். மழையினால் ஏற்படுகின்ற நன்மையால் நன்நீர் சுரந்து இங்கே பல பகுதிகளிலும் தேங்கியிருப்பது சிவ அற்புதம்.. மாருதப்புரவீரவள்ளி நீராடி, தனது குன்ம நோய் நீங்கப்பெற்ற தெய்வீக தீர்த்தம் இந்த கீரிமலையாகும்!

நித்திய, நைமித்திய பூஜைகள் கிரமமாக நடந்தேறுகிற இப்புண்ணிய தலத்தில் மாசி மாதத்தில் பதினைந்து நாடகளுக்கு மகோற்சவம் நடைபெறுகிறது. மாசி மகா சிவராத்திரியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறுகிறது.

பல அற்புதமான வரலாறுகளையும், கீர்த்திகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, தல வழிபாடு செய்தால் பாவங்கள் விலகும்., தோஷங்கள் நீங்கும், புண்ணியம் மிக்க வாழ்வு கைகூடும் . இதோ, மிக அருகில், யாழ் மண்ணில்தான் .. வருவீர் .. வழிபடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீமத் பகவத் கீதை

## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொடராக தருபவர் :
வை. திருச்செல்வம்

12



.. புகையினால் தீ சூழப்பட்டிருப்பது போலவும், கண்ணாடி அழுக்கால் மாசு படுவது போலவும், கர்ப்பத்தை கருப்பை சூழ்ந்திருப்பது போலவும் இது இவ்வுலகைச் சூழ்ந்திருக்கிறது.-- 38

குந்தியின் மகனே! விருப்ப மெனப்படும் இந் நிரப்பொணாத் தீ ஞானிக்கு நித்தியப் பகையாம் ஞானத்தைச் சூழ்ந்து நிற்கிறது.
-- 39

இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதற்கு நிலைக்களன் என்பர். இவற்றால் இது ஞானத்தைச் சூழ்ந்து மனிதனை மயங்குவிக்கிறது.
-- 40

ஆதலால் பாரத ரேறே, நீ தொடக்கத்தில் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்த பாவத்தைக் கொன்றுவிடு.
-- 41

இந்திரியங்களை உயர்வுடையன வென்பர். அவற்றிலும் மனம் மேல்.: , மனத்தைக் காட்டிலும் புத்தி மேல்: , புத்திக்கு மேலே அவன் (ஆத்மா).
-- 42



இங்கனம் புத்திக்கு மேலான பொருளை (ஆத்மாவை) உணர்ந்து, தன்னைத்தான் உறுதிப்படுத்திக்கொண்டு, வெல்லற்கரிய விருப்பமாம் பகையைக் கொல்லக் கடவாய். பெருந்தோளுடையாய்!

-- 43

இங்ஙனம் உபநிஷத்தும் பிரமம் வித்தையும்
யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன
சம்பாசணையுமாகிய ஸ்ரீமத் பகவத்
கீதையில் ''கர்மயோகம் '' என்ற மூன்றாம் அத்தியாயம்

**முற்றிற்று.**


**நான்காம் அத்தியாயமான க்ஷூக்ஷூஞான கர்ம சந்யாச யோகம் ;; அடுத்த இதழில் பகவான் கிருபையோடு ஆரம்பமாகும்.**

**( தொடர்ந்து வரும், மெய்சிலிர்க்க வைக்கும் ..)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக கதைகள்



# கருடனும், நந்தியும்

ஒரு சமயம் ஸ்ரீநாராயணன் ஈசனின் வழிபாட்டில் மெய்மறந்திருந்தார். அவருக்கு நேரம் போவதே தெரியவில்லை. ஆனால் விஷ்ணுவுக்காகக் காத்திருந்த கருடனோ பொறுமையை சற்று இழந்து விட்டார். சிவபெருமான்மீது சற்று எரிச்சலும் கொண்டுவிட்டார். இது ஈசனின் கவனத்தைக் கவர அவர் கருடன்மீது கோபமுற்றார். நந்திதேவரின் மூச்சுக்காற்றால் கருடனை அலைக்கழித்து புத்தி புகட்டினார்.

சம்பந்தர் ஈசனை வணங்கும்போது நந்தி விலகி நிற்கும் என்றோர் நம்பிக்கையும் சமயத்தில் இருக்கிறதாம். சம்பந்தர் வெளியே நின்றவாறு வடுபடும்போது நந்தி விலகி வழிவிட்டுக் கொடுக்குமாம்.

இதனை நினைத்து பெருமானை வணங்குவதும், அந்நேரத்தில் கருடன் அருகிலிருப்பதாக எண்ணுவதும் பெரும் புண்ணியமம் தருவதாம். செல்வமும், கல்வியும் ஒருசேர வருமாம் ..

# பக்தியில் கர்வம் ஏனோ? ..



தொண்டைமான் என்ற அரசன் பெருமாளிடத்தில் மிகவும் பக்தி உள்ளவன். அவன் தினமும் சுவர்ண புஷ்பங்களால் பகவானை பூஜித்தான். இதனால் அவனிடம் கர்வமும் இருந்தது.

ஒரு நாள் அவன் பூஜை செய்ய வந்தபோது முதல்நாள் பூஜையில் வைத்த சுவர்ண புஷ்பங்கள் தள்ளப் பட்டிருப்பதையும், பெருமானின் பாதத்தில் மண்ணால் செய்யப்பட்ட துளசி இலைகள் இருப்பதையும் கண்டு திகைத்தான்.

''பகவானே எனது சுவர்ண புஷ்பங்களை ஒதுக்கிவிட்டு மண் துளசியை ஏற்றுள்ளீர்களே! ..நான் என்ன குற்றம் செய்தேன் ..'' என்று கண்ணீர் விட்டான்.

பெருமான் கூறினார் --

''மன்னா, இந்த ஊரில் வடக்கு திசையில் பீமன் என்றொரு குயவன் இருக்கிறான். அவன் என் உருவத்தை மண்ணால் செய்து, மண்ணாலேயே துளசி செய்து சாத்தி தினமும் என்னை வழிபடுகிறான். அவனது மலர்கள் என்னை வந்தடைகின்றன. சுவர்ண புஷ்பம் சாத்துவதால் உன்னுள் அகம்பாவம் தலை காட்டுவதை நீ அறியவில்லை. இதுதான் காரணம். நான் என்ன செய்ய ..'' என்றார்.

திருந்திய அரசன் உடனேயே அந்த குயவனைத் தேடிச்சென்றான். 'ஏதும் குற்றம் புரிந்தோமோ' என்று நடுங்கியவனின் கால்களில் விழுந்து வணங்கினான் தொண்டைமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தர்ம சாஸ்திரம் -- 08



**எந்த வீட்டில் பெண்கள் கண்ணீர் சிந்தாமல் இருக்கின்றார்களோ, அந்த வீட்டில் எல்லா தெய்வங்களும் இருக்கின்றன. பெண்களும் அழக்கூடாது, அவர்களை அழ வைக்கவும் கூடாது என்பதில் குடும்பஸ்தர்கள் அக்கறை கொள்ள வேண்டும் ..**

*ஒரு பெண்ணுக்குத் திருமணம் முடிந்ததும் தன் பொறுப்பு கழிந்து விட்டது என்று*

*அப்பெண்ணின் தந்தையும், சகோதரனும் எண்ணக்கூடாது. அப்பெண்ணின் திருமணத்திற்குப் பின்பு அவள் வீட்டிற்கு வரும்போது தன்னை முன்பு போல உபசரிக்கவில்லை என்று அவள் ஏங்கினால் அவளின் தகப்பனின் குடும்பம் சூனியம் வைத்ததுபோல் சிதைந்து போகும் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால், மணமுடித்துக் கொடுத்த பெண்களின்மீது அதிக அக்கறை தேவை ..*

*ஒரு மனைவியானவள் தன் அழகால் கர்வம் கொண்டு, தனது புருஷனை மதியாமல் பிற ஆடவருடன் சேர்ந்தால், அவள் செய்த பாவத்திற்கு விமோசனமே இல்லை. மனைவி அதிக அழகுள்ளவளாக இருந்தாலும் ஆபத்து. அதிக அழகு இல்லாதவளாக இருந்தாலும் ஆபத்துதான் ..*

*தனக்கு செய்யப்படும் மரியாதையை ஒரு பிராமணன் விஷத்தைப்போல நினைத்து பயப்பட வேண்டும். அவமானத்தை அமிர்தமாக நினைத்து விரும்ப வேண்டும். நாஸ்திக வாதம் புரிபவர்களோடு விவாதம் செய்யக்கூடாது ..*

**மாதர்களுடனும், தாய், தங்கை வயது வந்த பெண் ஆகியோருடன் பேசும்போது நல்ல விஷயங்களையே பேச வேண்டும் ..**

*க்ஷேமத்தை எப்போதும் விரும்புகிறவன் தான் செய்யும் ஒவ்வொரு சுபகாரியங்களுக்கும் தெய்வ காரியங்களுக்கும், விரத சடங்குகளுக்கும், மத காரியங்களுக்கும் தன் பெண் உடன் பிறந்த சகோதரி ஆகியவர்களுக்கு ஆடை, ஆபரணம், பொருள் முதலியன கொடுத்து உபசரிக்க வேண்டும். குடும்பத்தில் திருமணம் போன்ற காரியங்கள் நடக்கும்போது சுமங்கலிகள் வருத்தமடையும்படி நடந்துகொள்ளக்கூடாது ..*

**நடந்து செல்லும்போது பசுமாடு, தெய்வ சப்பரம், நெய்குடம், அரசமரம், வில்வமரம், நெல்லிமரம், அரசுடன் சேர்ந்த வேப்பமரம் ஆகியவைகள் எதிரில் வந்தால் வலது பக்கமாக சுற்றி பிரதட்ஷணமாக போக வேண்டும் ..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனது வாகனம், படுக்கை, ஆசனம், கிணறு, தோட்டம், வீடு ஆகியவைகளை மற்றவன் அனுமதியின்றி அனுபவித்தால் உரியவனின் பாவத்தில் நான்கில் ஒரு பங்கை வாங்கிக் கொள்கிறான் ..

வீட்டில் தகாத சேர்க்கையுள்ளவர்கள் சில சமயம் சேராத ஸ்திரீகளுடன் சேர்ந்து தங்கினால் பசுமாட்டை ஒரு நாள் தங்க வைத்து பூஜை செய்தால் வீடு புனிதமாகிறது. கோமூத்திரத்தை எங்கே தெளித்தாலும் அந்த இடம் சுத்தி பெறுகிறது ..

மந்திரிக்கு பதவியின் பேரிலும், பேடிக்கு காமத்தின் பேரிலும், கற்றவனுக்கு வித்தையின் பேரிலும், சந்நியாசிகளுக்கு முக்தியின் பேரிலும், லோபிக்கு பிணத்தின் பேரிலும் சிந்தை இருக்கும். ஆனால் தரித்திரனுக்கு கணக்கிலடங்கா சிந்தைகள் இருக்கும். அவன் பூர்வ புண்ணிய பலனாலேயே தரித்திரனாக பிறக்கிறான். தரித்திரனாக இருப்பவன் பொறாமையில்லாமல் இருந்தால் விமோஷனம் உண்டு ..

நீர் நுழைய முடியாத இடத்தில் நெய் நுழையும். நெய் நுழைய முடியாத இடத்தில் புகை நுழையும். புகை நுழையாத இடத்தில் தரித்திரம் நுழையும். அதை நுழைய விடாமல் சமாளிப்பவனே உயர்ந்த சம்சாரி ஆவான் ..



கடன் வாங்கிய தந்தை, கணவனுக்கு அடங்காத மனைவி, மிக அழகுள்ள பெண், மூடனான பிள்ளை, பாசமில்லாத தாய் ஆகிய இவர்கள் தனக்கு தானே சத்துருக்கள் ஆவார்கள்

நதி, நீர், கருப்பட்டி, பால், தேன், ஸ்திரீயின் மடு, குழந்தை குழித்த இடம், வெற்றிலை பாக்கு, கிளி கொத்திய பழங்கள், வேட்டை நாய் கடித்த மாமிசம் ஆகிய இவைகளுக்கு எச்சில் இல்லை .

ஒருவனுக்கு வசதி ஏற்படும் சமயம் மனைவி வந்தால் காசு தேடுவான். தாசி வந்தால் கார் தேடுவான். கார் கிடைத்தால் பீர் தேடுவான். இப்படியாக மனிதனுக்கு வசதி பெருக பெருக ஆசையும் பெருகும்.

தாசி வசமானால் மனைவியைக் கைவிடுவான். சாஸ்திரம் வசமானால் வேதத்தை கைவிடுவான். மாப்பிள்ளை வசமானால் மகளை கைவிடுவான். அதேசமயம், குடிக்கு வசமானால் அனைத்தையும் கைவிடுவான் ..

.. இன்னும் இருக்கிறது

நன்றி : தர்மசாஸ்திரம் நூல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபக்தனுக்கு சிவ அபராதம்!!



சிறந்த சிவபக்தனாகிய ராவணன், ராமருடன் நடத்திய போரில் ஏன் தோற்றான்! சிவபிரான் ஏன் தன் பக்தனை காக்கவில்லை?

ஏனெனில், சிவபிரான் அவனுக்கு இதை அபராதமாக விதித்து வைத்திருந்தார் ..

ஜடாயுவோடு ஏற்பட்ட சண்டையில் ராவணன் சொன்ன பொய் அவனது சிவபக்தியை பாதித்துவிட்டதை அவனே அறிந்திருக்கவில்லை ..

சீதையை கவர்ந்துகொண்டு ஆகாய மார்க்கமாக பறந்த அவனது புஷ்பக விமானத்தை வழிமறித்தார் ஜடாயு. கழுகரசன் ஜடாயுவுக்கு ஏற்கனவே தசரத மன்னனுடன் நட்பு இருந்தது. சீதையோ தசரத ராமனின் மனைவி. விடுவாரா ஜடாயு?

''இந்த உத்தமியை விட்டுவிடு .. இல்லையேல் எனது தாக்குதலால் சிதறிவிடுவாய் ..'' என்று எச்சரித்தார்.

ராவணன் குணம்தான் தெரியுமே! பலமாக நகைத்தபடி வாளை உருவியவாறு விமானத்திருந்து இறங்கினான்.

இருவரும் கடுமையாக மோதினார்கள். கானகம் அதிர்ந்து பறவைகளும், மிருகங்களும் அஞ்சி நின்றன. ஆபத்பாந்தவனாக வந்து, உயிரைத் துச்சமெனக் கருதிப் போரிடும் ஜடாயுவுக்காக வேண்டியபடி நின்றாள் சீதை.

சாதாரண பறவையாக எடைபோட்டிருந்த ஜடாயுவின் வீரத்தை சிறிதும் எதிர்பார்த்திராத இலங்கேஸ்வரன் தடுமாறினான். ஜடாயுவின் கூறிய மூக்கும், நகங்களும் அவனது மேனியை இரத்தமயமாக்கின. ஆயுதங்களும் கைநழுவவே தந்திரமாக ஒரு முடிவுக்கு வந்தான் ராவணன்.

''பட்சி ராஜாவே, உன் வீரத்தை மெச்சுகிறேன். ஆயினும், நம் யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமல்லவா? நேராக நாம் நமது உயிர்நிலைகளை நோக்கியே போரிடுவோம். ஆதலால், உன்உயிர் எதில் தங்கி இருக்கிறதென்று கூறு ..'' என்றான்.

பட்சி அரசனுக்கும் அது சரியெனப்பட்டது. ''பட்சிகளாகிய எங்களுக்கு இறக்கையில்தான் உயிர்நிலை இருக்கிறது ..'' என்று கூறியதும்,

''ஓ, அப்படியா ..நல்லது. எனது உயிர்நிலை என்னுடைய தலைகளில் உள்ளது.'' என்று கூறினான் ராவணன்.

இங்குதான் ராவணன் சிவகுற்றம் செய்தான். ஏனெனில், உண்மையில் அவனது உயிர்நிலை அமிர்தகலசம் என்ற அவனது நெஞ்சத்தடத்தில் இருந்தது. ஜடாயுவை முறியடிப்பதற்காக வேண்டுமென்றே அப்படி பொய்யுரைத்தான்.

உடனே ஜடாயு அவனது தலைகளைக் குறிவைத்து தனது தாக்குதலை நடத்தியது. தனது கூறிய மூக்காலும், நகங்களாலும் சீற்றத்துடன் வீரமாகப் போரிட்டது.அதன் கவனத்தை தனது தலைகைளை நோக்கித் திசை திருப்பிவிட்டு, வேகமாக செயலில் இறங்கினான் ராவணன். சிவபெருமான் கொடுத்த 'சந்திரஹாசம்' என்ற வெற்றி வாளை எடுத்து ஜடாயுவின் இறக்கைகளை வெட்டிச்சாய்த்தான்.

எதிர்பாராத இத்தாக்குதலால் படுகாயமடைந்த ஜடாயு நிலத்தில் வீழ்ந்து துடித்த நிலையில், சீதையுடன் தனது வான் பயணத்தை தொடர்ந்தான் ராவணன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து உருவானதே ராவணனின் சிவக்குற்றம். போரில் வெல்வதற்காக அவன் பொய் கூறினான். ஜடாயுவோ உண்மையை உரைத்து உயிரைவிட்டது.


இக்காட்சியை புள்ளிருக்கு வேளூர் பதிகத்தில் திருஞான சம்பந்தர் இப்படிக் குறிப்பிடுவார்.

''பொய் சொல்லாதுயிர்
துறந்தாய் புள்ளிருக்கு
வேளூரே''






அதோடு, ஜடாயு ஒரு சிவபக்தர். தினமும் நூறு யோசனைதூரம் பறந்துசென்று, கடற்கரை அடைந்து அங்கே கடல் மணலால் சிவலிங்கம் செய்து, சிவபெருமானை அர்ச்சித்து சிவஞான போத சூத்திரங்களை ஓதி வழிபடுவது அவரின் வழக்கமாகும்.



இப்படிப்பட்ட சிறந்த சிவபக்தனிடம் தன் உயிர்நிலை பற்றி பொய் கூறியது, ஏமாற்றி வஞ்சித்தது, அவரைக் கொல்வதற்காக சிவன் தந்த வாளையே பயன்படுத்தியது ஆகிய மூன்று குற்றங்களை சிவபிரானுக்கெதிராக ராவணன் செய்தான். அதற்கான சிவ அபராதங்களை அவன் ஏற்கவேண்டிய நிலையிலேயே போர்க்களத்தில் ஈசன் அவனிடமிருந்து விலகியிருந்தார். ராமரின் பாணத்தால் அவன் உயிர் துறந்தான்.

இந்த அருமையான காவிய சம்பவம் கடந்த வருடம்
'பக்தி விஜயம் ..'
ஆவணி மாத இதழில் வெளிவந்தது.
புதிய வாசகர்களுக்காக மீண்டும் ஒருமுறை பிரசுரிக்கப்படுகிறது ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விலை உயர்ந்த வைரம் எது?

அவர் முக்காலும் உணர்ந்த ஒரு துறவி.

ஒருநாள் ஒரு நாட்டின் வழியாக நடந்து சென்றார். அவரின் பெருமையை அறிந்த அந்நாட்டு மன்னன் உடனே சென்று துறவியை தனது அரண்மனைக்கு வருகை தருமாறு அழைத்தான்.

துறவியும் அவனை மகிழ்விப்பதற்காக அரண்மனைக்குச் சென்றார்.

அங்கே ஏகப்பட்ட உபசாரங்களை அரசன் அவருக்குச் செய்தான். ஆடம்பரமான அரண்மனை உபசாரங்களில் பெருமளவு பணம் வீணாவதை துறவி அவதானித்தார். அவ்வளவும் மக்களின் வரிப்பணம் அல்லவா. இது துறவியை வருத்தியது.

துறவி விடைபெறும்போது மன்னன் தனது பொக்கிஷ அறையை ஆசீர்வதிக்க வேண்டி அவரை அங்கே அழைத்துச் சென்றான்.

அங்கே பெருமளவு பாதுகாப்புடன் ஒரு வைரக்கல் இருப்பதைக் கண்டார்.

''சுவாமி, இதன் மதிப்பு மிக அதிகம். இதுபோன்ற கல் வேறு எந்த நாட்டு அரசனிடமும் இல்லை ..''

என்றான் மன்னன்

துறவி ஒரு கேள்வி கேட்டார் --

''அரசே, இதன் மதிப்பு அதிகம் என்றால் இந்த கல்லால் நாட்டுக்கு ஒரு வருஷத்தில் எவ்வளவு வருமானம் கிடைக்கிறது? ..''

துறவியின் அறியாமையை நினைத்து உள்ளுக்குள் சிரித்த மன்னன்

''சுவாமி, இதனால் வருமானம் வராது. நிறைய வீரர்களைக்கொண்டு இதனைப் பாதுகாப்பதால் ஆண்டுக்கு ஆயிரம் பொற்காசுகள் செலவாகிறது ..''

என்று அந்த கல்லின் பெருமதியை

துறவி கூறினார் --

''அரசே, இதைவிட விலை உயர்ந்த கல் ஒன்றை நான் உனது நாட்டிலேயே பார்த்தேனே! என்னுடன் வந்தால் காட்டுகிறேன் ..''

என்றார்.

அரசன் திகைத்தான்.

'இதைவிட விலை உயர்ந்ததா, அதுவும் எனது நாட்டிலா ..'

என்ற எண்ணியவாறு துறவி அழைத்துச் சென்ற இடத்திற்குப் போனான். நகரத்துக்கு வெளியே ஒரு சிறு குடிசைக்குள் துறவி நுழைந்தார். அங்கே ஒரு கிழவி ஆட்டுக்கல்லில் மாவு அரைத்துக் கொண்டிருந்தாள். பலகாரம் செய்து பிழைத்து வரும் குடும்பம் அது. அந்த கல்லைக் காட்டியவாறு துறவி கூறினார்--

''மன்னா, உன்னிடம் இருக்கும் வைரக்கல்லைக் காப்பாற்ற நிறைய செலவு செய்கிறாய். அக்கல்லால் வருமானமும் இல்லையென்கிறாய்.. ஆனால் இந்தக் கல்லோ இடைவிடாமல் உழைத்து இந்த குடும்பத்தையே காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. இதுதானே விலை உயர்ந்த கல்? ..'' என்றார்.

அரசன் தனது தற்பெருமையை நினைத்து வருந்தி, துறவியிடம் மன்னிப்புக் கோரினான்..

அமெரிக்காவின் சிக்காகோ நகரத்தில் **International House of World Diamonds** என்ற உலகவைர ஸ்தாபனம் உள்ளது. அங்கே வைக்கப்பட்டிருக்கும் **Jem of Space** என்ற நீல வைரமே உலகின் விலையுயர்ந்த கல் என்கிறார்கள்.அதன் பாதுகாப்புச் செலவு நாள் ஒன்றுக்கு எத்தனையோ லட்சம் டொலர்களாம்!ஆனால் அதற்கு காப்புறுதியாலும், வங்கி 'டெபோசிற்' முறையாலும் நிறைய வருமானம் வருகிறது.இந்தக்கால மனிதன் நவீன மூளை உள்ளவனல்லவா! ..


பொது நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ' பக்தி விஜயம்.. ' தொடர்ந்து வரும் இதழ்களில் ...

### " அண்ணல் அருளால் அருளும் சிவாகமம் .."



வடமொழியில் அல்லவா உளது? தமிழ்கூறும் நல்லுலகம் அதனை அறிந்து, ஆன்ம லாபம் பெற வேண்டுமே! அதற்காகவே மூலன் உடலில் பரகாயம் செய்து திருமூலராகிய அப்பிரபு!

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே .." என்று ஆண்டவன் கட்டளையை சித்தரிப்பதை காண்க!



" பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன்
தன்பால் காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்துவர விருப்பதுவே .."
என்று சேரமான் பெருமாள் நாயனார்க்கு ஆண்டவன் விடும் கட்டளையைக் காண்க



" எதுக்கு இவ்வளவு யோசிக்கிறீங்க..
' பக்தி விஜய..' த்தில
எல்லா நல்ல விஷயங்களும் இருக்கும்.
எடுத்துப் பாருங்க.. "

**வாசிப்பு இன்பத்தில் திளைப்பீர், ஆன்ம பலத்தில் வாழ்வீர்! ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( இதுவரை பதிவு செய்யாத வாசகர்கள் சந்தாதாரர் ஆகி, இப்பணிக்கு ஒத்துழைக்குமாறு தயவாக வேண்டுகிறோம் ..)

# ' பக்தி விஜயம்.. '

## எங்கும், எல்லோர் வாழ்விலும் ..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த மலர்கள்...